Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, AUGUST 30, 2021

திங்கட்கிழமை ஓகஸ்ட் 30, 2021 | ஒளி: 07 கதிர் 87 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## நாளொன்றுக்கு 140 தொன் ஒக்சிசன் தேவை




கொரோனா தொற்றாளர்களுக்கு வழங்குவதற்காக வாராந்தம் 300 தொன் ஒக்சிசனை இந்தியாவிலிருந்து கொண்டு வருவதற்கு தீர்மானித்துள்ளதாக ஔடத உற்பத்திகள், வழங்கல் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சின் செயலாளர், வைத்தியர் சமன் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இந்நாள்களில் கொரோனா நோயாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு 140

தொடர்ச்சி P2

## 61,001 பேர் கைது



தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் 718 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று (29) ஞாயிற்றுக்கிழமை காலை 06 மணியுடன் நிறைவடைந்த 24 மணிநேரத்திலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் இதுவரையான காலப்பகுதியில் 61,001 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதனிடையே,

தொடர்ச்சி P2





இராணுவத்தினர் மட்டுமே

# ஃபைசர் தடுப்பூசியை வழங்குவர்

கொரோனாவுக்கு எதிரான ஃபைசர் தடுப்பூசியை வழங்குவதற்கான முழு அதிகாரமும் இராணுவத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## 'வன்டே கப்' இடியப்பத் தட்டுக்குத் தடை



இடியப்பத் தட்டு, குடிநீர் கோப்பை உட்பட ஏழு வகையான பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் உற்பத்திகளை தடை செய்வது தொடர்பாக, அமைச்சரவை பத்திரமொன்றை அமைச்சரவையில் விரைவில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றினுள், பிளாஸ்டிக்கினால் தயாரிக்கப்படும் பானம் உறிஞ்சான், முட்கரண்டி, குடிநீர் கோப்பை, கேக் வெட்டும் கத்தி, இடியப்பத் தட்டு மற்றும் பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீனினால் தயாரிக்கப்பட்ட பூ மாலைகள் ஆகியன உள்ளடங்குகின்றன.

கடந்த மார்ச் மாதம் 31ஆம் திகதியில் இருந்து 'செசே' பெக்கெட்டுகள் உள்ளிட்ட ஒருமுறை பயன்படுத்தக்கூடிய பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் உற்பத்திப் பொருட்களை தடை செய்ய சுற்றுச்சூழல் அமைச்சு நடவடிக்கை எடுத்திருந்தது.

தொடர்ச்சி P2

## நீல நிறமாக மாற்றிய கிஸ்லாடி பெண்ணைத் தேடி வலை

■ ரஞ்சித் ராஜபக்ஷ



மஞ்சள் நிறத்திலான லாப் சமையல் எரிவாயு சிலிண்டருக்கு நீல நிற வர்ணம் பூசி, லிட்ரோ (நீல நிற) சமையல் எரிவாயு நிரப்பப்பட்ட சிலிண்டரை பெற்றுக்கொண்ட சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

ஹட்டன்- டிக்கோயா நகரிலுள்ள லிட்ரோ சமையல் எரிவாயு (நீல நிறம்) முகவர் விற்பனை நிலையத்தில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஓட்டோவொன்றில் இந்த மாதம் 27ஆம் திகதி, வருகைத் தந்த பெண்ணொருவர்,

தொடர்ச்சி P2

## கொவிட் என்பது சாதாரண நோய் அல்ல



கொவிட் என்பது சாதாரண நோய் அல்ல. ஆகையால், அதிக அவதானத்துடன் செயற்பட வேண்டும் என தெரிவித்துள்ள பெருந்தோட்டத்துறை அமைச்சர் ரமேஷ் பத்திரண, கொவிட் வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை மற்றும் பதிவாகும் மரணங்களின் எண்ணிக்கை ஆகியவற்றை கருத்திற் கொண்டே ஊரடங்கு சட்டத்தை தொடர்ந்து அமுல்படுத்துவதா அல்லது தளர்த்துவதா என்ற தீர்மானம் எடுக்கப்படும் என்றார்.

பலப்பிடிய வைத்தியசாலையில் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுப்பட்டதன் பின்னர் ஊடகங்களுக்கு மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், கொவிட் தொற்றை சாதாரண நோயென ஒருபோதும் கருத முடியாது. அனைத்து தரப்பினரும் அவதானத்துடன் செயற்படவேண்டும். கொவிட் தாக்கத்தை கருத்திற் கொண்டு நாடு தழுவிய ரீதியில் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. சுகாதார தரப்பினரது ஆலோசனைகளுக்கு அமையவே ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## புரதம் நிறைந்த உணவுகளை அவசியம் உட்கொள்ளவும்



வீடுகளில் சிகிச்சை பெற்று வரும் கொரோனா நோயாளர்கள் புரதம் நிறைந்த உணவுகளை உட்கொள்வது மிகவும் அவசியமாவதாக மருத்துவ ஆய்வு நிறுவகம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## எஸ்.பிக்கு மூளை இல்லை



இலங்கையின் பிரபல அரசியல்வாதியாக 89ஆம் ஆண்டிலிருந்து பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஆளுங்கட்சியின் உறுப்பினரான எஸ்.பி திசாநாயக்கவை உள நல மருத்துவரிடம் உடனடியாக அழைத்துச் செல்ல வேண்டுமென கோரிக்கைவிடுத்துள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான், பாராளுமன்ற உறுப்பினர் என்ற ரீதியில் மக்கள் முன்னிலையில் அந்த கொடிய நோய் குறித்து,

தொடர்ச்சி P2

## ஆதிவாசி குடும்பத்தினருக்கு கொரோனா தொற்று உறுதி

தம்பானே ஆதிவாசி தலைவர் ஊருவரிகே வன்னில அத்தோவின் மனைவி மற்றும் சில குடும்ப உறுப்பினர்கள் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கொரோனா கண்டறியப்பட்டதால் மஹியங்கனை வைத்தியசாலையின் கொரோனா சிகிச்சை பிரிவில் அவரது மனைவி

தொடர்ச்சி P2

## தியாக கோரிக்கைவிட எந்த உரிமையும் இல்லை

மக்களைத் தியாகம் செய்யுமாறு கோரிக்கை விடுப்பதற்கு அரசாங்கத்துக்கு உரிமை இல்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இந்த தருணத்தில் கொரோனாவைக் கட்டுப்படுத்த ஒரு நிபுணர் குழுவை நியமிக்க அரசாங்கம் உறுதியளிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

மக்களை தியாகம் செய்ய அரசுக்கு நியாயமான உரிமை இருக்கிறதா என்று சூம் தொழில்நுட்பம் ஊடாக இடம்பெற்ற கலந்துரையாடலில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கே மேற்கண்ட பதிலை வழங்கினார்.



தொடர்ச்சி P2

## தோட்டத்தொழிலாளர்களை அலைக்கழிக்க வேண்டாம்


### திகாம்பரம் எம்.பி கோரிக்கை

■ துவாரகநாதன்



கொரோனா பரவல் தீவிரமடைந்து வரும் நிலையில், தடுப்பூசி மருந்தை செலுத்திக்கொள்ளச் செல்லும் தோட்டத் தொழிலாளர்கள் நாள் கணக்கில் அலைய வைப்பது வேதனை தருவதாக அமைந்துள்ளது எனத் தெரிவித்துள்ள, தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம், இத்தகைய மோசமான நிலை எதிர்காலத்தில் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தொடர்ச்சி P2



அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின் 108ஆவது ஜனன தினம்

சிறப்புக் கட்டுரை P5



## "கொள்ளா" மரணத்தில் உறவினர்கள் சந்தேகம்

■ ஆ.ரமேஸ்

நுவரெலியா நீதவான் நீதிமன்றத்தில், கடந்த 25ஆம் திகதியன்று பிணையில் விடுக்கப்பட்ட, ஆவாஎலிய பகுதியைச் சேர்ந்த கொள்ளா என்று அழைக்கப்படும் நமசிவாயம் அமிர்தலிங்கம் (வயது 42) என்பவரின் மரணம் தொடர்பில், தமக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளது என குடும்பத்தினர் தெரிவித்தனர்.

நுவரெலியா பீட்ரு தோட்டப்பகுதியை அண்மித்த பிதுருதலாகல பேணட் இயற்கை வனத்தில், 30 மீற்றர் உயரமான லவர்சிலீப் இயற்கை நீர் வீழ்ச்சி பகுதியில், குடிநீர் வழங்கும் தாங்கியிலிருந்ததே அவரது சடலம் கடந்த 28ஆம் திகதியன்று மீட்கப்பட்டது.


நுவரெலியா மாநகரசபையில் சுத்திகரிப்பு தொழிலாளியான இவர் ,

தொடர்ச்சி P2

## மிதக்கும் விருந்தகமும் நால்வரும் சுய தனிமை

■ டி.ஷங்கீதன்


நுவரெலியா கிரகெறி வாவியில் அமைந்துள்ள மிதக்கும் விருந்தகம் நுவரெலியா மாநகர சபை சுகாதார பிரிவினரால் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. நாடு முழுவதும் முடக்கப்பட்டிருக்கின்ற நிலையில் அந்த மிதக்கும் விருந்தகத்தில் விருந்துபசாரத்தில் ஈடுபட்ட நான்கு பேரையும் அங்கு கடமையாற்றிய இரண்டு நபர்களையும் மிதக்கும் விருந்தகத்திலேயே தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.



தொடர்ச்சி P2

## வறுமையான சடலங்களை இலவசமாக எரியூட்டுவோம்

■ க. அகரன்



உயிரிழந்தவர்களின் சடலத்தை எரியூட்டுவதற்கு கட்டணங்கள் அறவிடப்படும் எனத் தெரிவித்த வவுனியா நகரசபை தவிசாளர் இ.கௌதமன், வறுமைக்கோட்டுக்கு கீழுள்ள குடும்பத்தைச் சேர்ந்த யாராவது கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தால், அவர்களின் சடலங்களை எரியூட்டுவதற்கு கட்டணங்கள் அறவிடப்படாது என்றார்.

தொடர்ச்சி P2

LK Newspapers Viber Community

PAGE 1 தொடர்ச்சிகள்




# ஃபைசர் தடுப்பூசியை வழங்குவர்

வெளிப்படைத்தன்மை இல்லாமல் வெளி நபர்களுக்கு ஃபைசர் தடுப்பூசி வழங்கப்பட்ட சம்பவங்கள் பற்றிய தகவல்கள் வெளிவந்ததைத் தொடர்ந்து அரசாங்கம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

தடுப்பூசி பெற்ற நபர்களின் விவரங்கள் வேண்டுமென்றே ஆவணங்களில் சேர்க்கப்படவில்லை என்பது தெரியவந்துள்ளது.

இனிமேல், ஃபைசர் தடுப்பூசி இராணுவத்தின் அனுசரணையுடன் மக்களுக்கு வழங்கப்படும் என்றும், முறையான நடைமுறைக்கு வெளியே தடுப்பூசி பெற தகுதியற்ற எந்த நபருக்கும் வழங்கப்படமாட்டாது என்றும் இராணுவ தளபதி அறிவித்துள்ளார்.

சிலாபத்தில் உள்ள கொக்காவில தடுப்பூசி மையத்தில் சுகாதார அதிகாரிகளின் தலைமையில் ஃபைசர் தடுப்பூசி வெளியாட்களுக்கு வழங்கப்பட்டமை அண்மையில் தெரியவந்தமை குறிப்பிடத்தக்கது.

## நாளொன்றுக்கு 140 தொன் ஒக்சிசன் தேவை

தொன் ஒக்சிசன் வழங்கப்படுவதாக அமைச்சின் செயலாளர், வைத்தியர் சமன் ரத்னாயக்க குறிப்பிட்டுள்ளார்.

கொரோனா தொற்று பரவுவதற்கு முன்னர் நாட்டில் நோயாளர்களுக்காக 20 தொன் ஒக்சிசன் அளவு போதுமானதாக இருந்ததாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## 61,001 பேர் கைது




மேல் மாகாணத்தின் 13 எல்லைகளில் தொடர்ந்தும் சோதனைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

## 'வன்டே கப்' இடியப்பத் தட்டுக்குத் தடை

அதேபோல், ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதியில் இருந்து உக்காத லன்ச்சீட் தடை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டில் ஆண்டுதோறும் 2 பில்லியனுக்கும் அதிகமான பொலித்தீன் பைகள்



கொட்டப்படுவதாக அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

## நீல நிறமாக மாற்றிய கில்லாடி பெண்ணைத் தேடி வலை

லிட்ரோ சமையல் எரிவாயு வெற்று சிலிண்டரைக் கையளித்து விட்டு, அதற்குப் பதிலாக மற்றுமொரு சமையல் எரிவாய நிரப்பப்பட்ட சிலிண்டர் ஒன்றைக் கொள்வனவு செய்துள்ளார்.

இந்த நிலையில், குறித்த முகவர் நிலையத்துக்கு சமையல் எரிவாயு விநியோகத்துக்காக வருகைத் தந்த லொறியில், வெற்று சமையல் சிலிண்டர்களை ஏற்றும் போது, மஞ்சள் நிறம் வெளியே தெரிந்துள்ளது.

இதனையடுத்து, குறித்த வர்த்தக நிலையத்திலுள்ள பாதுகாப்பு கமெராவை பரிசோதித்த விற்பனை நிலைய உரிமையாளர், பெண்ணொருவர்



குறித்த சிலிண்டரை கொண்டு வந்துள்ளமை தெரியவந்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில், குறித்த வர்த்தகர் ஹட்டன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதுடன், அப்பெண்ணை கைதுசெய்வதற்கான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

## கொவிட் என்பது சாதாரண நோய் அல்ல

ஊரடங்கு சட்டம் தளர்த்தப்பட்டதும் சுகாதார பாதுகாப்பு அறிவுறுத்தல்கள் கடுமையாக்கப்படும். மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்து குறித்து அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. பொது போக்குவரத்து சேவைகளை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் முன்னெடுப்பது அவசியமாகும்.

கொவிட் தாக்கத்தில் இருந்து நாட்டு மக்களை பாதுகாக்க தொடர்ந்து ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்தினால் பொருளாதார ரீதியிலான பாதிப்புக்கள் ஏற்படும். பொருளாதாரம்,சுகாதாரம்



ஆகிய இரு பிரதான துறைகளை கருத்திற் கொண்டு அரசாங்கம் தீர்மானங்களை இனி எடுக்கும் என்றார்.

## தியாக கோரிக்கைவிட எந்த உரிமையும் இல்லை

உலக சுகாதார ஸ்தாபனம் கொரோனாவைக் கட்டுப்படுத்த நிபுணர் குழுவை நியமிக்க அழைப்பு விடுத்தது என்றும் இலங்கையைத் தவிர அனைத்து நாடுகளும் அந்த கோரிக்கையை நிறைவேற்றியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.



## புரதம் நிறைந்த உணவுகளை அவசியம் உட்கொள்ளவும்

"புரதச் சத்து நிறைந்த உணவுகள் மூலம் கொரோனா நோயாளர்கள் தமது நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்துக்கொள்ள முடியும்" என நிறுவகத்தின் விசேட வைத்திய நிபுணர் ரேணுகா ஜயதிஸ்ஸ குறிப்பிட்டுள்ளார்.

இதனைத்தவிர, விட்டமின் "சி" நிறைந்த உணவுகளை சேர்த்துக்கொள்ளும் அதேநேரம், விட்டமின் "டீ" ஐ பெற்றுக்கொள்வதற்காக நாளொன்றில் அரைமணி நேரம் சூரிய ஒளியில் இருப்பது முக்கியம் என வைத்திய நிபுணர் மேலும் கூறியுள்ளார்.

தானிய வகைகளை உணவில் சேர்த்துக்கொள்வதோடு தண்ணீர் அருந்துவது மிக முக்கியம் என கூறிய வைத்திய நிபுணர், இதன்போது சுடுநீர் அருந்துவது சிறந்தது என குறிப்பிட்டுள்ளார்.

## எஸ்.பிக்கு மூளை இல்லை



நகைச்சுவையை வெளிபடுத்தியமை தொடர்பில் வெட்கமடையவேண்டும் என்றார்.

அவரது இல்லத்தில் நேற்று (29) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

இந்த நாட்டுக்கு தேவையான வர்த்தகர்கள், அரசியல்வாதிகள் என பலர் இத்தொற்றால் பலியாகி வரும் நிலையில், தொற்றிலிருந்து எவ்வாற மக்களை பாதுகாப்பது என சகலரும் சிந்தித்துகாண்டிருக்கும் போது, இந்த பாராளுமன்ற உறுப்பினரின் கருத்து கவலையடையச் செய்கின்றது.

ஏன் இவ்வாறு மூளையில்லாமல் கதைக்கின்றார் என தெரியவில்லை.

யாரின் தேவைக்காக இவ்வாறு கதைக்கின்றார் என்றும் தெரியவில்லை. ஒருவேளை அரசாங்கத்தின் உயர்மட்டத்தில் உள்ள தலைவர் கூறுகிறாரோ தெரியவில்லை மக்கள் முன்னிலையில், இவ்வாறு கதைக்க வேண்டுமென்று என தெரியவில்லை என்றார்.

இவ்வாறு இவர் பாலர் வகுப்பு பிள்ளைகளைப் போல கதைப்பதால் தான், இவருக்கு இந்த அரசாங்கத்தில் அமைச்சப் பதவி ஒன்று கூட வழங்கப்படவில்லை போல என்றார்.

## தோட்டத்தொழிலாளர்களை அலைக்கழிக்க வேண்டாம்

நாட்டில் சகல மக்களுக்கும் கொரோனா தடுப்பூசி கூடிய விரைவில் வழங்கப்பட வேண்டும் என்று ஜனாதிபதி பணிப்புரை விடுத்து வருகின்றார். எனினும், தோட்டத் தொழிலாளர்கள் இந்த விடயத்தில் அலைக்கழிக்கப்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது என்றும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அறிக்கையொன்றை விடுத்துள்ள அவர்,

டிக்கோயா-கிளங்கள் ஆதார வைத்தியசாலையில் இரண்டாவது தடுப்பூசியைப் ஏற்றிக் கொள்வதற்காக, கடந்த சில தினங்களாக பெரும் சிரமங்களை எதிர் நோக்கியுள்ளார்கள். இரண்டு மூன்று தினங்களாக அதிகாலை நேரத்திலிருந்து பிற்பகல் வரை டிக்கோயா வைத்தியசாலையில் காத்து நின்ற போதிலும் தடுப்பூசிகள் வரவில்லை. என்று கூறி தோட்டத் தொழிலாளர்கள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளார்கள்.

தொழிலாளர்கள் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதற்காக தோட்டத்தில் தமது வேலைக்கும் செல்லாது, தமது வருமானத்தையும் இழந்து போக்குவரத்துச் செலவையும் பொருட்படுத்தாது மணிக் கணக்கில் காத்துக் கிடந்தும் பயன் எதுவுமின்றி திரும்பி வந்துள்ளார்கள். கிராம சேவகர்கள் தடுப்பூசி வரவில்லை என்பதை முன்கூட்டியே அறிவித்திருந்தால் இவ்வாறு அலைந்து திரிய வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்காது.

எனவே, தொழிலாளர்களின் நலன் கருதி உரிய நேரத்தில் தடுப்பூசியை வழங்க சுகாதாரத் துறையினர் அக்கறை காட்ட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

## ஆதிவாசி குடும்பத்தினருக்கு கொரோனா தொற்று உறுதி

அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று வன்னில அத்தோ தெரிவித்துள்ளார்.

ஆதிவாசிகளின் கிராமமான தம்பானே மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் நடத்தப்பட்ட விரைவான அன்டிஜென் பரிசோதனையின் போது 44 பேருக்கு கொரோனா தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

அப்பகுதியில் கடந்த 27 ஆம் திகதி 115 பேருக்கு நடத்தப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில், 44 பேருக்கு கொரோனா இருப்பது கண்டறியப்பட்டது. அதனையடுத்து அவர்கள், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## "கொள்ளா" மரணத்தில் உறவினர்கள் சந்தேகம்

மூன்று பிள்ளைகளின் தந்தையாவார்.

நுவரெலியாவில் விடொன்று உடைக்கப்பட்ட சம்பவத்தில் கடந்த (25) ஆம் திகதி நுவரெலியா பொலிஸார் கைது செய்யப்பட்ட அவர், நுவரெலியா மாவட்ட நீதவானால், அன்றையதினமே பிணையில் விடுவிக்கப்பட்டார்.

அவர்,சடலமாக மீட்கப்பட்ட தண்ணீர் தாங்கியிலிருந்தே, நுவரெலியா --ஆவாஎலியபிரதேசங்களான ,மஹிந்த மாவத்தை,எதிரிசிங்க மாவத்தை, லவர்சிலிப் தோட்டம்,பீட்ரு தோட்டம் மற்றும் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலை பிரதேசம் ஆகிய பல பகுதிகளுக்கு குடிநீர்

> சடலத்தின் மீதான பி.சி.ஆர் பரிசோதனைகளும் முன்னெடுக்கப்படவுள்ளன

வழங்கப்படுகின்றது.

இதனால், இந்த குடிநீர் தாங்கியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட குடிநீர் விநியோகம் தற்காலிகமாக தடைசெய்யப்பட்டுள்ளது. அதனால், ஆவாஎலிய பிரதேசத்தில் சனிக்கிழமை (28) மாலை முதல் குடிநீருக்கு தடை எற்பட்டுள்ளது. .

இதேவேளை, சடலத்தின் மீதான பி.சி. ஆர் பரிசோதனைகளும் முன்னெடுக்கப்படவுள்ளன என வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

## மிதக்கும் விருந்தகமும் நால்வரும் சுய தனிமை

நுவரெலியா ஆடைத் தொழிற்சாலை ஒன்றுக்கு கடமை நிமிர்த்தமாக வருகை தந்திருந்த நான்கு பேரையும் தங்களுடைய வீடுகளிலேயே தனிமைப்படுத்துமாறு நுவரெலியா மாநகர சபை சுகாதார பிரிவினரால் அவர்கள் வசிக்கின்ற கிராம சேவகர் பிரிவுகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

இவர்கள் நான்கு பேரில், மூவர் .கெகிராவ பகுதியைச் சேர்ந்தவர்களாவர். மற்றையவர் ஹபரண-கொகரல்ல பகுதியை சேர்ந்தவர் ஆவார்.

இவர்கள் கடமை நிமித்தமாக நுவரெலியா ஆடைத் தொழிற்சாலைக்கு வருகை தந்துள்ள நிலையிலேயே தற்பொழுது அமுலில் உள்ள பயண கட்டுப்பாடுகளையும் கொரோனா விதிகளையும் மீறி கிரகறி வாவியில் அமைக்கப்பட்டுள்ள மிதக்கும் விருந்தகத்தில் விருந்துபசாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

குறித்த மிதக்கும் விருந்தகத்தில் கடமையில் இருந்த இருவரும் அங்கேயே 14 நாள்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

ஏனைய நால்வரையும் அவர்களுடைய வீடுகளுக்கு செல்வதற்கு சுகாதார பிரிவினர் அனுமதி வழங்கியதுடன் அவர்களை அவர்களுடைய வீடுகளில் தனிமைப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## வறுமையான சடலங்களை இலவசமாக எரியூட்டுவோம்

வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் கொரோனா தொற்றினால் உயிரிழப்பவர்களின் சடலங்கள், வவுனியா நகரசபையின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் பூந்தோட்டம் எரிவாயு மயானத்தில் எரியூட்டப்பட்டு வருகின்றன.

எனினும், குறித்த எரியூட்டல் செயற்பாடுகளுக்கு இதுவரை கட்டணம் அறவிடப்பட்டு வந்தது. எனினும், இனி வரும் காலங்களில் கொரோனா தொற்றினால் உயிரிழக்கும் வறுமைக்கோட்டுக்கு உட்பட்டவர்களின் சடலங்களை எரியூட்டுவதற்கு பணம் அறவிடப்படமாட்டாது எனவும் ஏனைய சடலங்களை எரியூட்டுவதற்கு 7,000 ரூபாய் அறவிடப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

வறுமை நிலையினை உறுதிப்படுத்தும் விதமாக கிராம சேவையாளர் மற்றும் பிரதேச செயலாளர்களின் உறுதிப்படுத்தல் சான்றிதழ்கள் எமக்கு சமர்பிக்கப்படும் பட்சத்தில் அந்த சடலங்களை கட்டணம் இல்லாமல் எரியூட்டுவதற்கான அனுமதியை மாத்திரம் நாம் வழங்குவோம் எனவும் தெரிவித்தார்.

கொரோனா தொற்றுக்கு உள்ளாகி மரணிப்போரின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில் இறந்த உடல்களை எரிப்பதற்கு சில மணி நேரம் தேவைப்படுகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

LKNewspapers Viber Community

பல உயிர்களை காப்பாற்றுவதற்கு

# ஒக்டோபர் வரை முடக்கவும்

நாட்டை ஒக்டோபர் இரண்டாம் திகதி வரை முடக்கினால்தான் பல உயிர்களைக் காப்பாற்றலாமென உலக சுகாதார ஸ்தாபனத்துடன் தொடர்புடைய நிபுணர்கள் குழுவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

நாட்டை ஒக்டோபர் இரண்டாம் திகதி வரை முடக்கவேண்டும் அல்லது செப்டம்பர் 18 ம் திகதி வரை முடக்கவேண்டும். அவ்வாறு செய்தால் ஆயிரக்கணக்கான உயிர்களை காப்பாற்ற முடியும் எனவும் நிபுணர்கள் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

கொரோனா வைரஸ் உயிரிழப்புகளை குறைக்க, நாட்டை ஒக்டோபர் இரண்டாம் திகதி வரை அல்லது செப்டம்பர் 18 ஆம் திகதி வரை முடக்கினால் 7,500 முதல் 10,000 ஆயிரம் உயிர்களை காப்பாற்ற முடியுமென தெரிவித்துள்ளனர்.



இவ்வாறு நாட்டை முடக்குவதன் மூலம் பொதுமக்களின் பாதுகாப்பிற்காக தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகளை சிறப்பாக பூர்த்தி செய்ய முடியும் என வைத்தியர் பாலித அபயக்கோன் தலைமையிலான நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக டெல்டா கொரோனா வைரஸ் காணப்படும் சூழமைவினை அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

நாட்டை முடக்குவதன் மூலம் சுகாதாரதுறையினர் தற்போதைய அழுத்தங்களில் இருந்து மீள்வதற்கான சந்தர்ப்பம் கிட்டும்,தற்போது மருத்துவமனைகளில் இடப்பற்றாக்குறையும் ஒக்சிசன் பற்றாக்குறையும் காணப்படுகின்றது எனசுட்டிக்காட்டியுள்ளனர்.

ஆராயப்பட்ட மாதிரிகளில் 90 சதவீதமானவை டெல்டா வைரஸ் மேல்மாகாணத்துக்கு வெளியே பரவியுள்ளதை உறுதி செய்துள்ளன என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

சிரேஷ்ட ஊடகவியலாளர்

## ஹுஸைன் பாறுக் காலமானார்



கலாபூஷணம் ஹுஸைன் பாறுக்,சிறிது காலம் நோய்வாய்ப்பட்டிருந்த நிலையில் கடந்த சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

சிரேஷ்ட ஊடகவியலாளரான இவர் ஐ.ரி.என். தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகிய முத்துச்சரம், இரசிகர் அரங்கம் போன்ற சினிமாப் பாடல் மற்றும் பொழுது போக்கு நிகழ்ச்சிகளின் தயாரிப்பாளர் சுயாதீன தொலைக்கட்சியில் ஒளிபரப்பான அபூ நானா தொடர் நகைச் சுவை நாடகத்தினை எழுதி தயாரித்தளித்தவர். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையில் அதிதி தயாரிப்பாளராகவும் கூட்டுத்தாபன செய்திப் பிரிவிலும் கடமையாற்றியுள்ளார்.

இவர்,வர்ணம் தொலைக்காட்சியில் கன்ஸுல் இஸ்லாம் எனும் முஸ்லிம் சஞ்சிகை நிகழ்ச்சியினை தயாரித்து வழங்கியிருந்தார்.

முஸ்லிம் சமய கலாசார அமைச்சினால் நடாத்தப்பட்ட வாழ்வோரை வாழ்த்துவோம் நிகழ்வில் லியாவுல் பகன்னான் எனும் கௌரவம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். லியாவுல் பன்னான் கலைச்சுடர் ஹுஸைன் பாறுக் தனது 78வது வயதில் மெகடகொன்னாவ இல்லத்தில் காலமானார். ஜனாஸா மாளிகாவத்தை முஸ்லிம் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

## சீனியை சதொசவில் 130ருபாவுக்கு பெறலாம்



மக்களுக்குத் தேவையான பருப்பு மற்றும் சீனியை சதொசவில் பெற்றுக் கொள்ளலாமெனத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் ஜனக்க வாக்கும்புர, செவனகல, பெலவத்த மற்றும் ஹிங்குரான சீனி தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் சீனியே விநியோகிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த இராஜாங்க அமைச்சர் ஜனக்க வாக்கும்புர,நுகர்வோருக்கு 130 க்கு ரூபாய்க்கு விற்பனை செய்யத் தேவையான பருப்பு,சீனி என்பன சதொசவுக்கு வழங்கப்பட்டுள்ளன என்று இராஜாங்க அமைச்சர் ஜனக்க வாக்கும்புர தெரிவித்தார்.

நாடு முழுவதும் உள்ள அனைத்து கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்கள் மற்றும் சதொச விற்பனை நிலையங்களில் நுகர்வோர் சீனியை ரூ .130 க்கு வாங்க முடியும் என குறிப்பிட்டார்.

# அவசர சிகிச்சைப்பிரிவில் 186 பேர் அனுமதி

கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டு இதுவரை 186 பேர் அவசர சிகிச்சைப் பிரிவுகளில் சிகிச்சை பெற்று வருவதாக சுகாதார அமைச்சின் கொவிட் 19 இணைப்பாளர், வைத்தியர் அன்வர் ஹம்தானி தெரிவித்துள்ளார்.

ஒகஸ்ட் (27) வரை 942 கொரோனா நோயாளர்கள் ஒக்சிசனின் உதவியுடன் சிகிச்சை பெறுகின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நீரிழிவு, இரத்த அழுத்தம், இருதய நோய் மற்றும் சிறுநீரக நோய் உள்ளிட்ட நீண்டநாள் நோய் தாக்கங்களுக்கு உள்ளான 4,347 பேர் கொரோனா தொற்று ஏற்பட்டு வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் வைத்தியர் அன்வர் ஹம்தானி தெரிவித்துள்ளார்.

ஐக்கிய அரபு எமிரேட்ஸுக்கான

## சுற்றுலா விசாவுக்கு அனுமதி

ஐக்கிய அரபு எமிரேட்ஸுக்கான (UAE) அனைத்து நாடுகளிலிருந்தும் சுற்றுலா விசாக்களுக்கான இன்று 30ஆம் திகதி முதல் விண்ணப்பிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுற்றுலாப் பயணிகள் உலக சுகாதார அமைப்பு (WHO) ஆல் அங்கீகரிக்கப்பட்ட கொரோனா தடுப்பூசி மருந்துகளில் ஏதாவது ஒரு தடுப்பூசி போடப்பட்டிருக்க வேண்டும்.

முன்னர் தடை செய்யப்பட்ட நாடுகளிலிருந்து வந்தவர்கள் உட்பட அனைத்து நாடுகளின் குடிமக்களுக்கும் இந்த முடிவு பொருந்தும்மெனவும் அறிவித்துள்ளது.

சுற்றுலா விசாவில் வரும் பயணிகள் விமான நிலையத்தில் கண்டிப்பாக விரைவான பிசிஆர் சோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

ஐக்கிய அரபு அமீரகத்தில் தடுப்பூசி போடப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் நன்மைகளைப் பெற விரும்பும் பயணிகள்




ICA இயங்குதளம் அல்லது அல் ஹொஸ்ன் விண்ணப்பத்தின் மூலம் தடுப்பூசியைப் பதிவு செய்யலாம்.

இருப்பினும், புதிய பயண வழிகாட்டுதலின் படி, விலக்கு அளிக்கப்படாத பிரிவுகள் உட்பட, தடுப்பூசி போடப்படாத பயணிகளுக்கான அனைத்து விதிகளும் நடைமுறையில் உள்ளன.

இதுவரை AstraZeneca, Johnson & Johnson, Moderna, Pfizer-BioNTech, Sinopharm, மற்றும் Sinovac போன்றவற்றை உலக சுகாதார அமைப்பு (WHO) அங்கீகரித்துள்ளது.

# கொரோனா தொற்றால் பொட்ட நௌபர் பலி



கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியிருந்த மரண தண்டனை கைதியான 'பொட்ட நௌபர்" எனும் மொஹமட் நௌபர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார் என சிறைச்சாலைகள் திணைக்கள பேச்சாளர் தெரிவித்தார்.

முன்னாள் நீதிபதி சரத் அம்பேபிட்டிய கொலை வழக்கு தொடர்பில் கொழும்பு மேல் நீதிமன்றத்தால் மரண தண்டனை வழங்கப்பட்டிருந்தது.

சிறுநீரக பிரச்சினை காரணமாக பூஸ்ஸ சிறைச்சாலையில் இருந்து கராப்பிட்டிய வைத்தியசாலைக்கு அழைத்து வரப்பட்டார். அதன்பின்னர் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் அவருக்கு கொரோனா தொற்று உறுதியானது.

## அத்தனகலவில் மினி சூறாவளி

அத்தனகல்ல பிரதேசத்தை ஊடறுத்து வீசிய பலத்த காற்றினால் 82 வீடுகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது.

"ரன்பொக்குனகம வீட்டுத்தொகுதியில் சுமார் 30 வீடுகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது" என கம்பஹா மாவட்ட இடர் முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் அஜித் நிஷாந்த தெரிவித்துள்ளார்.

இதனிடையே, யட்டியன, திஹாரிய, மல்வத்த மற்றும் மாஇம்புல பகுதிகளில் 30 வீடுகள் பலத்த காற்றினால் சேதமடைந்துள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதனிடையே மேல், சப்ரகமுவ, மத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் 75 மில்லிமீற்றர் வரை மழை பெய்யலாம் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

## ஊடக ஜாம்பவான் எல்மோ குணரத்னவின் திடீர் மறைவுக்கு பிரதமர் அனுதாபம்



ஆறு தசாப்த காலங்களுக்கு மேலாக இந்நாட்டின் பத்திரிகை துறைக்கு சிறப்பான சேவையாற்றிய சிரேஷ்ட ஊடகவியலாளர் எல்மோ குணரத்னவின் திடீர் மறைவு குறித்து. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மிகுந்த கவலையடைவதாக தெரிவித்து அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார் .

மேலும் பிரதமர் தெரிவிக்கையில்,எல்மோ குணரத்ன ஊடகத்துறையில் பன்முக திறமையும் சிறந்த ஆளுமையும் வாய்ந்த விருது பெற்ற சிரேஷ்ட ஊடகவியலாளராவார். சட்டக் கல்வி மாணவராக விளங்கிய இவர், 1954ஆம் ஆண்டு உள்ளூர் நிறுவனமொன்றின் வெளியீடான 'சிங்கள ஜாதிய' மற்றும் 'கார்டியன்' ஆகிய பத்திரிகைகளில் நீதிமன்ற செய்தியாளராக தனது ஊடக வாழ்க்கையை ஆரம்பித்தார்.

இவர், 1955ஆம் ஆண்டு லேக்ஹவுஸ் நிறுவனத்தில் இணைந்தமையானது அவரது ஊடக வாழ்க்கையின் திருப்புமுனையாக விளங்கியது. 'சிலுமின', 'ஜனதா', 'டெய்லி நியூஸ்' மற்றும் 'சண்டே ஒப்சர்வர்' பத்திரிகைகளில் பொலிஸ் மற்றும் அரசியல் செய்தியாளராக நீண்ட கால பயணத்தை ஆரம்பித்தார்.

பொதுநலவாய ஊடக சங்கத்தின் புலமைப்பரிசில் பெற்று ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் ஊடகக் கற்கை நெறியை கற்கச் சென்ற எல்மோ குணரத்ன, அங்கு கல்வி கற்றுக் கொண்டே 'ராய்ட்டர்', 'நியூஸ் ஒஃப் த வேர்ல்ட்' மற்றும் 'மென்சஸ்டர் கார்டியன்' ஆகிய பத்திரிகைகளில் நிருபராக பணியாற்றும் வாய்ப்பை பெற்றார்.

லேக்ஹவுஸ் வெளியீட்டிலான பல பத்திரிகைகளில் உயர் பதவிகளை வகித்து வந்த அவர், 1973ஆம் ஆண்டு அந்நிறுவனம் அரசமயப்படுத்தப்பட்டதை தொடர்ந்து அதற்கு எதிர்ப்பை தெரிவித்து சேவையிலிருந்து விலகினார்.

தாய்லாந்து பாங்கொக்கிலிருந்து வெளியாகும் 'மோர்னிங் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையில் சில காலம் சேவையாற்றிய எல்மோ குணரத்ன, இந்நாட்டின் ஊடக துறைக்கு மீண்டும் தனது தீவிர பங்களிப்பை வழங்கி 1978ஆம் ஆண்டு 'டைம்ஸ்' மற்றும் 'டெய்லி மிரர்' பத்திரிகைகளில் பிரதி ஆசிரியராக சேவையை ஆரம்பித்தார்.

களுத்துறை மாவட்டத்தில்

# ஊடக அமைப்பு உதயம்

களுத்துறை மாவட்டத்தில் மாணவர்கள் கல்வியில் பின்தங்கிய நிலைக்கான காரணம், தொழில் வாய்ப்பற்ற இளைஞர்கள், போதைவஸ்து பாவனைக்கு அடிமையாகியுள்ள இளைஞர் சமுதாயம், கொரோனா காலத்தில் மக்களின் பொறுப்புகள், மருத்துவத் தேவைகள் என்பவற்றைக் கருத்திற்கொண்டு, களுத்துறையில் இதுவரை காலமும் உருவாக்கப்படாத ஓர் அமைப்பாக களுத்துறை மாவட்டத்தின் ஊடக அமைப்பு உதயமாகியுள்ளது

பல்வேறு சமூக அமைப்புகள் இதனை மேற்கொண்டு வந்தாலும் சமூக ரீதியில் ஏற்படுகின்ற சிக்கல்களுக்கும், முரண்பாடுகளுக்கும் ஏனைய ஊடகங்களால் பரப்பப்படுகின்ற போலி பிரசாரங்களுக்கும் இன்னுமொரு ஊடகத்தினால் தான் பதிலளிக்க முடியும் என்பது உண்மை. அந்தவகையில் 21ஆம் நூற்றாண்டின் பலம்வாய்ந்த துறையான ஊடக பலத்தைப் பயன்படுத்தி இந்த அமைப்பு எதிர்காலத்தில் தொழிற்பட இருக்கின்றது.

இந்த அமைப்பானது களுத்துறை மாவட்ட இளைஞர் ஊடக அமைப்பு என்ற பெயரை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

இதன் ஆரம்ப

> **சமூக ரீதியில் ஏற்படுகின்ற சிக்கல்களுக்கும், முரண்பாடுகளுக்கும் ஏனைய ஊடகங்களால் பரப்பப்படுகின்ற போலி பிரசாரங்களுக்கும் இன்னுமோர் ஊடகத்தினால் தான் பதிலளிக்க முடியும்**

கலந்துரையாடல் இணைய வழியாக (Zoom) அண்மையில் இடம்பெற்றது. இக்கலந்துரையாடலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் என்.எம். அமீன் தலைமை தாங்கினார். அத்தோடு, களுத்துறை நகரசபை உறுப்பினரும், உதயம் தொலைக்காட்சியின் நிறுவனருமான ஹிசாம் சுகைல், ஊடக மாணவர் மற்றும் சமூக ஆர்வலருமான முஹம்மத் நஸ்ரான், ஊடகவியலாளர்களான ஆகில் அஹ்மத், அப்ரா அன்ஸார் ஆகியோர் இணைந்து கலந்தாலோசித்து எடுத்த தீர்மானத்திற்கு இணங்க,களுத்துறை மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் ஊடகங்கள், ஊடகத் துறை மாணவர்கள், சமூக ஊடகங்களில் செயற்படுபவர்கள் மற்றும் சமூக ஆர்வலர்களுக்கான இணைய வழி ஒரு நாள் பயிற்சிப்பட்டறை ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சீனி செயற்கை தட்டுபாட்டை ஏற்படுத்திய

# வர்த்தகர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை



கொரோனா வைரஸ் தொற்றுக்கு மத்தியில், சில வர்த்தகர்கள், சீனிக்கு செயற்கையான தட்டுப்பாட்டை ஏற்படுத்தி விலையை அதிகரித்திருப்பதாக தெரிவித்த இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன இவ்வாறான வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தம் கருத்து தெரிவித்த இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன, இதற்காக 2003 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் தற்காலத்துக்குப் பொருத்தமான வகையில் மறுசீரமைக்கப்படுமெனவும் கூறியுள்ளார்.

இதேவேளை,மக்களுக்கு சலுகை விலையில் சீனியை பெற்றுக் கொள்ள அரசாங்கம் திட்டமொன்றை நடைமுறைப்படு த்தவுள்ளதாகவும் எதிர்வரும் நாட்களில் நிதியமைச்சருடன் பேச்சுவார்த்தை நடாத்தி விரைந்த தீரவொன்றை பெறவுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்துள்ளார்.


ஹட்டன் ப்ளான்டேஷன் பிஎல்சியின் வருடாந்த பொதுக்கூட்டத்திற்கான அறிவித்தல்

நாட்டில் நிலவும் கோவிட்-19 பெருந்தொற்று காரணமாக நடைமுறையில் இருக்கும் ஒழுங்குமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகளை கருத்தில் கொண்டு, வரையறுக்கப்பட்ட ஹட்டன் ப்ளான்டேஷன் பிஎல்சியின் இயக்குனர் சபை (4வது) வருடாந்த பொதுக் கூட்டத்தை, கொழும்பு பங்குப் பரிவர்த்தனையால் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டல்களுக்கு அமைய, 2021 செப்டெம்பர் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமையன்று முற்பகல் 10 மணிக்கு, இலக்கம் 168, இரண்டாம் மாடி, நீர்கொழும்பு வீதி, பேலியகொடயில் அமைந்திருக்கும் ஹட்டன் ப்ளான்டேஷன் தலைமைக் காரியாலயத்தில் மெய்நிகர் சந்திப்பாக நடாத்த தீர்மானித்துள்ளனர்.

எனவே, இந்த அறிவித்தல் மூலமாக, நிறுவனத்தின் நான்காவது (4வது) வருடாந்த பொதுக் கூட்டம் 2021 செப்டம்பர் 24 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு இணையத்தள வாயிலாக இலத்திரனியல் முறையில் நடைபெறும் என்பதையும், கூட்டத்தின் போது முன் கொண்டுவரப்படும் விடயங்கள் பற்றியும் இங்கு அறிவிக்கப்படுகிறது.

1. 2021 மார்ச் 31 ஆம் திகதியன்று முடிவடைந்த நிதியாண்டிற்கான இயக்குநர்கள் குழுவின் ஆண்டறிக்கை மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளின் அறிக்கையுடன், கணக்காய்வாளர்களின் அறிக்கையையும் பெறுதல் மற்றும் அதனை பரிசீலித்தல்.
2. 78 வயதை எட்டிய திரு. பூ. எச். பலிஹக்காரவின் நியமனத்திற்கான ஓர் சாதாரணத் தீர்மானமாக பின்வரும் தீர்மானத்தை முன்மொழிதல்.

சாதாரணத் தீர்மானம்

"2007 ஆம் ஆண்டு 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 210 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள வயது வரம்பு இந்த ஆண்டு பொதுக் கூட்டத்திற்கு முன்னதாக 78 வயதை எட்டிய திரு. பூ. எச். பலிஹக்காரவுக்கும் பொருந்தாது என இங்கு தீர்மானம் செய்யப்படுகிறது"

3. சங்க அமைப்பு விதியின் பிரிவு 30 (1)ன் படி திரு ஜி. டி. சீட்டன் அவர்களை மீண்டும் தேர்ந்தெடுத்தல்.
4. சங்க அமைப்பு விதியின் பிரிவு 28 (2)ன் படி திரு எச். டி. ஏ. டி. பெரேரா அவர்களை மீண்டும் தேர்ந்தெடுத்தல்.
5. சங்க அமைப்பு விதியின் பிரிவு 28 (2)ன் படி திரு. டபிள்யூ. எல். பி. விஜேவர்தன அவர்களை மீண்டும் தேர்ந்தெடுத்தல்.
6. மெஸ்ஸர்ஸ் பிரைஸ்வாட்டர்ஹவுஸ் கூப்பர்ஸ் (பட்டயக் கணக்காய்வாளர்) மீண்டும் தேர்ந்தெடுத்தல் மற்றும் இயக்குனர்களுக்கு அவர்களுக்குரிய ஊதியத்தை நிர்ணயிக்க அதிகாரம் அளித்தல்.
7. தொண்டு நிறுவனங்களுக்கான பங்களிப்புகளைத் தீர்மானிக்க இயக்குநர்களுக்கு அதிகாரம் அளித்தல்.

சபையின் உத்தரவின் பேரில்,

கோர்ப்பரேட் அட்வைசரி சர்விசஸ் (பிரைவேட்) லிமிடெட்
செயலாளர்கள், ஹட்டன் ப்ளான்டேஷன் பிஎல்சி
கொழும்பு
25 ஆகஸ்ட் 2021.

குறிப்புகள்

1. கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை குழுமத்தின் வலைத் தளத்தில் இருந்து http://hattonplantations.lk/financial-data/HPL_AGM_2020-2021.pdf தரவிறக்கம் செய்துகொள்ள முடியும், மேலும் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை ஆணையகத்தின் இணையத் தளத்திற்கு சென்று https://www.cse.lk/pages/ company-profile/ company-profile.component.html?symbol=HPL.N0000 அறிவிப்பு தாவலை கிளிக் செய்யவும்.
a. பொதுக்கூட்டத்திற்கான அறிவிப்பு
b. பங்குதாரர்களுக்கான சுற்றறிக்கை
c. பிரதிநிதிக்கான படிவம்
d. வருடாந்த பொதுக்கூட்டத்தில் இணையும் வழிகாட்டல் மற்றும் பதிவு செயல்முறை
e. வருடாந்த பொதுக்கூட்டத்துக்கான பதிவுப் படிவம்
f. ஆண்டறிக்கையின் அச்சிடப்பட்ட நகலுக்கான விண்ணப்ப படிவம்
2. மேற்குறிப்பிட்ட மெய்நிகர் சந்திப்பில் பங்கேற்கவும் வாக்களிக்கவும் உரிமை கொண்ட ஒரு பங்குதாரர் தனது சார்பாக இலத்திரனியல் வழிகளில் கலந்து கொள்ளவும் வாக்களிக்கவும் பிரதிநிதி ஒருவரை நியமிக்க உரிமை உண்டு.
3. பிரதிநிதி கம்பனியின் பங்குதாரராக இருக்கவேண்டிய அவசியம் இல்லை.
4. மேற்கண்ட மெய்நிகர் சந்திப்பில் எவ்வாறு பங்கேற்பது என்பது பற்றிய மேலதிக தகவலுக்கு, தயவுசெய்து மேலே 1ல் குறிப்பிடப்பட்டுள்ளபடி பதிவிறக்கம் செய்யக்கூடிய செயல்முறையைப் பார்க்கவும்.


LK Newspapers Viber Community

புதுக்குடியிருப்பின் பரிசோதனை முடிவுகள்

# ‘அதிர்ச்சியளிக்கின்றன’

■ சுகிர்தாகுமார்

கடந்த நாள்களில் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன், பி.சி.ஆர் முடிவுகள் அதிர்ச்சியளிக்கின்றன எனத் தெரிவித்த புதுக்குடியிருப்பு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி எம். கெங்காதீஸ்வரன்இ ஆபத்தான கட்டத்தை நோக்கி புதுக்குடியிருப்பு செல்வதாகவும் கூறினார்.

அத்துடன், ஒரு சிலரது அசமந்தப்போக்கால் புதுக்குடியிருப்பு பிரதேசமே முற்றாக பாதிப்படையும் நிலைமை ஏற்படலாமெனவும் நிலைமை கட்டுக்குள் அடங்காமல் போகுமானால், எவராலும் வைத்தியர்களால் காப்பாற்ற முடியாமல் போய்விடும் எனவும், அவர் எச்சரித்தார். இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர்,



புதுக்குடியிருப்பில், தொடர்ச்சியாக கொரோனா தொற்றாளர்கள் அதிகரித்து வருவதாகவும் இது கடந்த பத்து நாள்களுக்கும் மேலாக பலரின் உடல் நிலை தொடர்பில் வெளியான பெறுபேறாகாவே பார்க்க வேண்டியுள்ளதெனவும் கூறினார்.

இன்றும் பலர் அறிகுறிகளுடன் வீடுகளுக்குள் இருப்பதாகத் தெரிவித்த அவர், இவர்கள் அனைவரும் வைத்தியசாலையில் நாட வேண்டும் என்றும், அவர் தெரிவித்தார்.

வடமாகாணத்தில், அதிகளவாக கொரோனா தொற்றும் பிரதேசமாக புதுக்குடியிருப்பு பிரதேசம் மீண்டும் அடையாளம் காணப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அவர், கடந்த புதன்கிழமை (25) 100 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில், 25 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

இந்த நிலைமை தொடருமானால், குறுகிய காலத்தில் புதுக்குடியிருப்பு பிரதேசம் கொரோனா தொற்றால் மோசமான நிலைமை எதிர்கொள்ள நேரிடலாம் எனவும், அவர் எச்சரிக்கை விடுத்தார்.

ஆகவே, தொடர்ந்து வரும் நாள்களில் குறைந்தது இரண்டு வாரங்கள் வீட்டை விட்டு வெளியே வராமல் இருப்பது அவசியம் என்றும், எம்.கெங்காதீஸ்வரன் கேட்டுக்கொண்டார்.

3 வாரங்களுக்குள் கொரோனா மரணங்களை

# ‘பூச்சியமாக்குவோம்’

## கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் சூளுரை.

■ வி.ரி.சகாதேவராஜா



கல்முனை பிராந்தியத்தில் முதலாவது தடுப்பூசி ஏற்றிய வீதம் 93 சத வீதத்தை தாண்டியுள்ளதாகத் தெரிவித்த கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைப்பணிப்பாளர் சுகுணன், இரண்டாவது தடுப்பூசி இன்று (30) முதல் கட்டம் கட்டமாக ஆரம்பிக்கப்படும் என்றும் கூறினார்.

இந்நிலையில், எண்ணி இன்னும் மூன்று கிழமைகளுக்குள் கல்முனை பிராந்தியத்தில், கொரோனா மரணங்களை பூச்சியத்துக்கு கொண்டு வருவோம் என்றும், சுகுணன் சூளுரைத்தார்.

இது தெர்டர்பில் தொடர்ந்துரைத்த அவர், தடுப்பூசி வழங்கலில் ஏற்பட்டுள்ள தாமதத்தால், கல்முனை பிராந்தியத்தில். தொற்றின் வேகமும் மரண வீதமும் அதிகரித்து வருவதாகத் தெரிவித்தார்.

எமக்கு இறுதியாக கிடைத்த தடுப்பூசிகளைக் கொண்டு முதலாவது டோஸ் இதுவரை 93 சத வீதமானோருக்கு ஏற்றியுள்ளோம் எனத் தெரிவித்த அவர், இது சாதனையாக கருதப்பட்டது எனவும் எனினும், 60 வயதுக்கு மேற்பட்ட சிலர் தடுப்பூசிகளைப் பெறாத காரணத்தால் மரண வீதம் அதிகரித்து வருவதாகவும் கூறினார்.

‘இதேவேளை, கல்முனை பிராந்தியத்தில், இந்த வாரத்தில் அதிகளாவான தொற்றாளர்கள் இனங்காணப்பட்டிருந்தனர். இதுவரை இல்லாத வகையில் இந்த வாரத்தில் ஒரே நாளில் அதிகூடிய தொற்றாளர்கள் எண்ணிக்கையாக 181 பேர் அடையாளம் காணப்பட்டனர்’ என்றார்.

கொரோனா தொடர்பான

# ‘தகவல்களை வழங்க முடியாது’

■ க. அகரன்

வவுனியா மாவட்டத்தின் கொரோனா நிலைமைகள் தொடர்பாக உத்தியோகபூர்வமான தகவல்களை ஊடகங்களுக்கு வழங்க முடியாதென, வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் உயர் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

வவுனியாவில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் நிலையில், அது தொடர்பான கலந்துரையாடலொன்று, வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில், நேற்று முன்தினம் (28) நடைபெற்றது. இதன்போது, மாவட்டத்தின் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை மற்றும் உயிரிழப்பு தொடர்பான உத்தியோகபூர்வமான தகவல்களை ஊடகவியலாளர்களுக்கு வழங்குமாறு கோரப்பட்டிருந்தது.



**திருக்கார்த்திகை திருவிழா…**

நல்லூர் கோவில் வருடாந்த மஹோற்சவத்தின் 17ஆம் நாள் திருவிழாவான திருக்கார்த்திகை திருவிழா, நேற்று (29) நடைபெற்றது.
(படப்பிடிப்பு: எம்றொசாந்த்)

நடமாடும் சேவை ஊடாக

# ‘அத்தியாவசிய பொருள்கள் விநியோகம்’

■ எம்.எஸ்.எம்.ஹனீபா



தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுலிலுள்ள காலப்பகுதியில், அக்கரைப்பற்று மாநகர சபைக்குட்பட்ட பிரதேசத்தில் உள்ள பொதுமக்களு தேவையான அத்தியாவசிய பொருள்களை நடமாடும் சேவை ஊடாக நாளாந்தம் விநியோகிக்கப்பட்டு வருவதாக, அக்கரைப்பற்று மாநாகர மேயர் அதாஉல்லா அஹமட் சக்கி, நேற்று (29) தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், ஊரடங்குச் சட்டம் விதிக்கப்பட்ட இந்தக் காலப்பகுதியில், வீட்டை விட்டு வெளியேற வேண்டாமெனவும், பொதுமக்களைக் கேட்டுக்கொண்டார்.

அத்துடன், அக்கரைப்பற்று பிரதேசத்துக்கு சட்டவிரோதமாக வருபவர்களுக்கு எதிராக, தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும், அவர் தெரிவித்தார்.



**சுற்றித்திரிந்தோருக்கு பரிசோதனை**

நாட்டில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுலில் உள்ள நிலையில், சாய்ந்தமருது பிரதேசத்தில், அத்தியாவசிய தேவையின்றி நடமாடி திரிந்தோர் மீது, நேற்று (29) அன்டிஜன் பரிசோதனை முன்னெடுக்கப்பட்டது. (படப்பிடிப்பு: எம்.என்.எம்.அப்ராஸ்)

நெல்லை பதுக்கி

# களஞ்சியசாலைகளுக்கு சீல்



■ எம்.எம்.அஹமட் அனாம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகளவான நெல் பதுக்கி வைக்கப்பட்ட களஞ்சியசாலைகளுக்கு சீல் வைக்கப்பட்டதுடன், உரிமையாளர்களுக்கு எதிராக வழக்குகளும் பதிவு செய்யப்பட்டன.

கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்து, மட்டக்களப்பு நகர், காத்தான்குடி, களுவாஞ்சிக்குடி, ஏறாவூர், ஒட்டமாவடி மற்றும் வாழைச்சேனை ஆகிய பிரதேசங்களில், பதிவுசெய்யப்படாத நெல் களஞ்சியசாலைகள் மற்றும் வர்த்தக நிலையங்கள் மீது மட்டக்களப்பு மாவட்ட நுகர்வோர் அதிகார சபையினரால், கடந்த நான்கு நாள்களாக திடீர் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

இதன் போது, பதிவு செய்யப்படாமல் நெல்லை களஞ்சியப்படுத்தி பதுக்கி வைத்திருந்தமை, பல ஆயிரக்கணக்கான நெல் மூட்டைகளை களஞ்சியப்படுத்தி வைத்தமை ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ், பல களஞ்சியசாலைகளுக்கு சீல் வைக்கப்பட்டதுடன், உரிமையாளர்களுக்கு எதிராக வழக்குகளும் பதிவு செய்யப்பட்டன.

அத்துடன், நெல்லைப் பதுக்கி வைத்திருந்த சில வியாபாரிகள், தானாக முன்வந்து, தங்களுடைய நெல்களை அரசாங்க நெல் சந்தைப்படுத்தும் அதிகாரசபைக்கு வழங்கவும் உடன்பட்டனர்.

யாழில் இன்று

# ‘2ஆவது டோஸ் தடுப்பூசி வழங்கப்படும்’

■ எஸ். நிதர்ஷன்



யாழ்ப்பாணம் மாவட்டத்தில், முதலாவது டோஸ் தடுப்பூசியைப் பெற்றுக்கொண்ட 30 வயதுக்கு மேற்பட்டவர்கள், 18 வயதுக்கு மேற்பட்ட கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் முன்களப் பணியாளர்களுக்கான இரண்டாவது டோஸ் தடுப்பூசி, இன்று (30) முதல் வழங்கப்படவுள்ளன என, வடமாகாண பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி க. நந்தகுமாரன் தெரிவித்தார்.

இது தொடர்ந்துரைத்த அவர், 18 வயதுக்கு மேற்பட்ட கர்ப்பிணித் தாய்மார்களுக்கு, முன்பு வழங்கப்பட்டதன் படியே பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்ட தினத்தில் இத்தடுப்பூசிகள் வழங்கப்படும் என்றார்.

அவர்களுக்கான தடுப்பூசி ஏற்றப்படும் தினம் பற்றிய விவரங்கள் அந்தப் பிரதேசத்துக்குரிய சுகாதார வைத்திய அதிகாரிகள் மூலம் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு அறியத்தரப்படும் என்றும், அவர் கூறினார்.

வைத்தியசாலை கழிப்பறையில்

# தொற்றாளரின் சடலம் மீட்பு

■ எஸ் தில்லைநாதன்

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நோயாளி ஒருவர், வைத்தியசாலையின் கழிப்பறையில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உடுப்பிட்டி - கம்பர்மலையைச் சேர்ந்த 49 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவரே, இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சுகவீனம் காரணமாக, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக குறித்த நபருக்கு, வெள்ளிக்கிழமை (27) இரவு, கொரோனா தொற்று ஏற்பட்டமை உறுதிபடுத்தப்பட்டது.

வைத்தியசாலையில் உள்ள கழிப்பறையிலிருந்த திரவம் ஒன்றை அருந்தி, குறித்த நபர், தனது உயிரை மாய்த்துக்கொண்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராசா விசாரணையை மேற்கொண்டு, பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டதுடன், சடலத்தை யாழ். மாநகரசபை மின்சார தகனம் சாலையில் எரியூட்டுமாறும் உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன், கொரோனா தொற்று ஏற்பட்டாலும், உரிய சிகிச்சையின் பின்னர், நோயாளிகள் பூரண சுகம் பெற்று, வீடு திரும்பலாமென, பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராசா தெரிவித்தார்.

எனவே, இவ்வாறான தவறான முடிவு எதனையும் எடுக்க தேவை இலலை எனவும், அவர் கூறினார்.

அதிகரிக்கும் தொற்றாளர்களும் மரணங்களும்:

# ‘வவுனியாவுக்கு அச்சுறுத்தல்’

■ க. அகரன்

வவுனியா மாவட்டத்தில், கடந்த இரு வாரங்களில் அதிகரித்து வரும் கொரோனா தொற்றாளர்களும் அதனூடாக ஏற்படும் மரணங்களும், தமது மாவட்டத்துக்குப் பெரும் அச்சுறுத்தல் என்பதை வெளிகாட்டுகிறது என, வவுனியா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியகலாநிதி க. ராகுலன் தெரிவித்தார்.

வவுனியா வைத்தியசாலையில், கொரோனா தொற்றாளர்களின் நிலைமைகள் தொடர்பில், அவரிடம் கேட்டபோதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்,

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், வவுனியா வைத்தியசாலையில், கடந்த இரண்டு வாரங்களில், கொரோனா தொற்றாளர்களாக அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகத் தெரிவித்தார்.



போக்குவரத்து அனுமதிப்பத்திரம் வழங்கல்

# அம்பாறையில் இடைநிறுத்தம்

■ எம்.எஸ்.எம். ஹனீபா

தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுலிலுள்ள காலத்தில் மாகாணங்களுக்கிடையிலான அத்தியாவசிய சேவைக்காக வழங்கப்பட்ட போக்குவரத்து அனுமதிப்பத்திரம் பிரதேச செயலகங்கள் ஊடாக வழங்குவது இடைநிறுத்தப்பட்டுள்ளதாக, அம்பாறை மாவட்ட மேலதிகச் செயலாளர் வீ. ஜெகதீசன், நேற்று (29) தெரிவித்தார்.

பொதுமக்கள் மாகாணங்களுக்கிடையிலான அத்தியாவசிய தேவைகளுக்காக பயணிக்கும் போது, அத்தியாவசிய தேவைக்கான உரிய ஆவணங்களை, பாதுகாப்புப் பிரிவினரால் ஏற்படுத்தப்பட்டுள்ள சோதனைச் சாவடிகளில் சமர்ப்பித்து அவற்றை நிரூபித்து பயணங்களை தடையின்றி தொடர முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# முதியோர் கொடுப்பனவு கையளிப்பு

■ ஏ.எம்.ஏ.பரீட், எப்.முபாரக்

திருகோணமலை மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் சீ.அருள் செல்வத்தின் அறிவுறுத்தலுக்கு அமைவாக. மூதூர் தபாலகத்தில் முதியோர் கொடுப்பனவுகளைப் பெறும் பயனாளிகளுக்கு, வீடு வீடாகச் சென்று, நேற்று (29) கொடுப்பனவுகள் கையளிக்கப்பட்டன.

தற்போது நாட்டில் அமுலில் இருக்கும் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் காரணமாக, இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



மூதூர் தபாலகத்தின் உதவித் தபால் அதிபர் எம்.எம். ரிஷாட் மற்றும் காரியாலய உதவியாளர் ஆகியோர், பயனாளிகளின் வீடுகளுக்கு நேரடியாகச் சென்று, இந்த நிதியுதவியினை கையளித்தனர்.

# நடமாடியோருக்கு எதிராக நடவடிக்கை



■ எம்.றொசாந்த்

நாட்டில் ஊரடங்கு சட்டம் அமுலில் உள்ள நிலையில், வீதிகளில் அநாவசியமாக பலர் நடமாடி திரிந்த நிலையில், யாழ்ப்பாணப் பொலிஸார் நேற்று முன்தினம் (28) இரவு, யாழ்ப்பாணம் புறநகர் பகுதிகளில், திடீர் வீதிச்சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன் போது, அநாவசியமாக வீதியில் நடமாடியோர் பலரை மறித்து சோதனைக்கு உட்படுத்தியதுடன், அவர்களின் விவரங்களை பதிந்த பின்னர் கடுமையாக எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

இதேவேளை, அநாவசியமாக வீதியில் நடமாடியோர்களுக்கு எதிராக சட்ட நவடிக்கைகளை முன்னெடுக்க உள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பில் விசேட ரோந்து:

# திறந்த கடைகளுக்கு பூட்டு: சுற்றித் திரிந்தோருக்கு எச்சரிக்கை

■ க. சரவணன்

மட்டக்களப்பில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி வர்தக நிலையங்களை திறந்து வியாபாரத்தில் ஈடுபட்டவர்கள், வீதிகளில் அநாவசியமாக சுற்றி திரிந்தவர்களை பொலிஸாரால் எச்சரிக்கப்பட்டனர்.

இந்தச் செயற்பாடு, நேற்று (29) மட்டக்களப்பு தலைமையக பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டது.

மண்முனை வடக்கு பிரதேச செயலக கொரோனா செயலணி கூட்டம் நேற்று முன்தினம் (28) நடைபெற்றது. இதன்போது



மட்டக்களப்பு மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில், தனிமைபடுத்தல் ஊரடங்கு சட்டத்தை மீறி வீதிகளில் பொதுமக்கள் அநாவசியமாக நடமாடுவதாகவும் பல வர்த்தக நிலையங்கள் திறந்து வியாபாரத்தில் ஈடுபட்டுவருவதாக பொலிஸாரின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டத்தை மீறி திறக்கப்படும் வர்த்தக நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

LK Newspapers Viber Community

முறையான திட்டமிடல் இன்மையால் ரூ. 2,000இல்

# குழறுபடி

■ நீலமேகம் பிரசாந்த்



ஊரடங்கின் போது வருமானத்தை இழந்தவர்களுக்கு வழங்கப்படுகின்ற 2,000 ரூபாய் கொடுப்பனவு வழங்கலில், முறையான திட்டமிடல் இன்மையால் குழறுபடிகள் காணப்படுவதாக, மலையக தொழிலாளர் முன்னணியின் நிதி செயலாளர் புஸ்பா விஸ்வநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற 2,000 ரூபாயில் ஏராளமான குளறுபடிகள் காணப்படுகின்றது எனவும் 5,000 ரூபாய் வழங்கும் போது ஏற்பட்ட அதே பிரச்சினை இந்த 2,000 ரூபாய் வழங்கலிலும் காணப்படுகின்றது எனவும் கூறினார். ஊரடங்கு காலத்தின் போது, வருமானத்தை இழந்த பல பேருக்கு இந்த நிவாரணத் தொகை கிடைக்கவில்லை எனச் சாடிய அவர், அதுமட்டுமல்லாமல் பலர் நிவாரணத் தொகையை பெற சென்றும் ஏமாற்றத்துடனேயே திரும்பி வந்துள்ளதாகவும் கூறினார்.

நிவாரணம் வழங்க அரசாங்கம் முற்பட்டாலும் வழங்குவதற்கான எவ்விதமான முறையான யுக்திகளும் அரசாங்கம் கையிலெடுக்கவில்லை எனத் தெரிவித்த அவர், எனவே முறையான ஒழுங்கமைப்பில் அரசாங்கம் இரண்டாயிரத்தை வழங்க வேண்டுமெனவும் கூறினார்.

மேலும், 'நாட்டில் அத்தியாவசிய பொருள்களுக்கான தட்டுப்பாடு நிலவுகின்றது. இந்த 2,000 ரூபாயை வைத்து எவ்வித அத்தியாவசிய பொருள்களையும் பெற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது. அரசாங்கம் முறையான ஒழுங்கமைப்பில் நிவாரணத்தொகையை வழங்க வேண்டும்' எனவும், புஸ்பா விஸ்வநாதன் தெரிவித்தார்.

தடுப்பூசி வழங்கல்:

## 'தோட்டப் பகுதியில் துரிதப்படுத்தவும்'

■ ஷான் சதீஸ்



நுவரெலியா மாவட்டத்தில் குறிப்பாக, தோட்டப்புற மக்களுக்கு முழுமையாக தடுப்பூசி வழங்குவதை துரிதப்படுத்த வேண்டுமென, தொழிலாளர் தேசிய முன்னணியின் நோர்வூட் பிரதேச சபை உறுப்பினர் பு. இராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

நுவரெலியா மாவட்டத்தில் 11,490க்கும் மேற்பட்டவர்கள் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டும், சுமார் 241 பேர் உயிரிழந்துள்ள நிலையில், குறித்த மாவட்டத்துக்கு தடுப்பூசி வழங்கலை துரிதப்படுத்த வேண்டும் என்றும், அவர் கூறினார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே, இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில், நுவரெலியா மாவட்டத்துக்குட்பட்ட பல பொது சுகாதார பிரிவுகளில், கொரோனா தடுப்பூசி வழங்குவதற்கான உரிய திகதி அறிவிக்கப்பட்டு, அது பிற்போடப்பட்டுள்ளதாகவும் இந்நிலையில், பொதுமக்கள் தன்னிடம் இது குறித்து முறைப்பாடுடையதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்டத்தில், கொரோனா தடுப்பூசி வழங்கும் திட்டம் தாமதமடைவதாக தெரிவித்துள்ள அவர், இதனால் பெரும்பாலானோர் அச்சமடைந்துள்ளனர் எனவும் கூறியுள்ளார்.


இவ்வாறான நிலையில், 30 வயதுக்கும் மேற்பட்டவர்கள் கட்டாயமாக தடுப்பூசி பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் செப்டெம்பர் மாதம் 15ஆம் திகதி முதல் தடுப்பூசி அட்டையின்றி பொதுவெளியில் எவரையும் அனுமதிக்க முடியாது என அரசாங்கம் அறிவித்துள்ள நிலையில், தோட்டப்பகுதியில் உள்ள மற்றும் அதனை அண்டியவர்களுக்கான தடுப்பூசி வேலைத்திட்டம் முன்னெடுப்பதில் தாமதநிலை உருவாக்கியுள்ளது என்றும், அவர் குறிப்பிட்டுள்ளார்.

'குறிப்பாக, அம்பகமுவ பொது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்துக்குட்பட்ட டிக்கோயா பகுதியில், 30 வயதுக்கு மேற்பட்டோருக்கான முதற்கட்ட தடுப்பூசி இது வரையில் ஏற்றப்படவில்லை

'அதேபோல, மஸ்கெலியா பொது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலத்துக்குட்பட்ட லெதண்டி கிராம சேவகர் பிரிவில், 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான இரண்டாம் கட்ட தடுப்பூசி, நாளை (30) ஏற்றப்படும் என அறிவித்த போதிலும், குறித்த திகதியில் மாற்றம் கொண்டு வரப்பட்டுள்ளதாக, சுகாதார அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

'எனவே, இவ்விடயத்தில் உரிய சுகாதார தரப்பினர் தலையிட்டு, குறித்த மாவட்டத்தில் உள்ள குறிப்பாக தோட்டப் பகுதிகளுக்கு தடுப்பூசி வழங்குவதற்கு துரித நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டியது அவசியம்' என்றும், அவர் தெரிவித்துள்ளார்.

அதேபோல, நுவரெலியா மாவட்ட ஆளும் தரப்பு அரசியல்வாதிகள், உடனடியாக தடுப்பூசியை பெற்றுக்கொடுக்க அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்க வேண்டுமெனவும், அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



லிந்துலை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதிகளில், 121 பேருக்கு, கொரோனா வைரஸ் தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளதாக, லிந்துலை சுகாதார வைத்திய அதிகாரி ஜனாத் அபேகுணரத்ன தெரிவித்தார்.

லிந்துலை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட டயகம, அக்கரபத்தனை, மெரயா மற்றும் ரட்ணகிரிய ஆகிய பகுதிகளில் சுகவீனமுற்ற 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையிலேயே, 121 பேருக்கு உறுதிபடுத்தப்பட்டது.

---

நுவரெலியா மாவட்டத்தில், நேற்று முன்தினம் (28) வெளியான அறிக்கையின் படி, இதுவரையில் 11,766 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அத்துடன், 243 பேர் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன், நேற்று முன்தினம் (28) முதலான 24 மணித்தியாலயங்களில் 80 குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் சுகாதார பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

---

நானுஓயா, ரதல்ல, கெல்சி, டெஸ்போட், கந்தப்பளை ஆகிய இன்னும் பல தோட்டங்கள் மற்றும் கிராமப் பகுதிகளில் இருந்து வருகைதந்திருந்த கர்ப்பிணித் தாய்மார்களுக்கு நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையின் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தில் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கை நேற்று (29) முன்னெடுக்கப்பட்டது.

---

பொகவந்தலாவ ஹோலீன்சி, என்பீலட், டிக்கோயா தெற்கு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த கர்ப்பிணி தாய்மாருக்கான கொரோனா தடுப்பூசியின் 2ஆவது டோஸ், டிக்கோயா நகர மண்டபத்தில் வைத்து, நேற்று (29) வழங்கப்பட்டது.

இதன்போது, 100 கர்ப்பிணி தாய்மாருக்கான தடுப்பூசி ஏற்றப்பட்டது.

## 50 மதுபான போத்தல்களுடன் ஒருவர் கைது

■ எம்.கிருஸ்ணா



நோர்வூட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புளியாவத்தை - பிலிங்போனி தோட்டப் பகுதியில், நேற்று முன்தினம் (28), 50 மதுபான போத்தல்களுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து, பிலிங்போனி தோட்டப் பகுதியில் உள்ள வீடொன்றை சுற்றவளைத்து சோதனை செய்த போதே, குறித்த பர், 50 மதுபான போத்தல்களுடன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள வேளையில், தோட்டப் பகுதியில், அதிக விலையில் விற்பனை செய்வதற்காக பதுக்கி வைக்கப்பட்டிருந்ததாகவும் ஒரு மதுபான போத்தல் 3,500 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுவதாகவும், பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபருக்கு எதிராக வழக்கு பதிவு செய்து, ஹட்டன் மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக, நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர்.

டிக்கோயாவில் தடுப்பூசிகள்

## '1,500 பேருக்கு ஏற்றப்படவில்லை'



நோர்வூட் பிரதேச நிர்வாக எல்லைக்கு உட்பட்ட டிக்கோயா 319 கிராம சேவகர் பிரிவில் உள்ள சுமார் 1,500 பேருக்கு, இதுவரை கொரோனா தடுப்பூசிகள் வழங்கப்படவில்லை என, நோர்வூட் பிரதேச சபைத் தலைவர் கே. குழந்தைவேல் ரவி தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், நோர்வூட் பிரதேச சபைக்குட்பட்ட டிக்கோயா தோட்டம், தரவளை மேற்பிரிவு, தரவளை கீழ்ப்பிரிவு மற்றும் கொலனி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சுமார் 1,500 பேர் எந்த விதமான தடுப்பூசிகளையும் இதுவரை பெற்றுக் கொள்ளவில்லை என்றார்.

இங்குள்ள மக்களில் பெரும்பாலானோர் தோட்டத் தொழிலாளர்கள் ஆவர் எனத் தெரிவித்த அவர், தமது அத்தியாவசித் தேவைகளுக்காக ஹட்டன், டிக்கோயா, நோர்வூட் நகரங்களுக்கு செல்ல வேண்டியவர்களாகவும் அவர்கள் இருக்கின்றார்கள் என்றும் கூறினார்.

'அடுத்த மாதத்தில் இருந்து மக்கள் வேறு இடங்களுக்கு பயணிக்கும் போது தடுப்பூசி ஏற்றிக் கொண்டமைக்கான உறுதிப்படுத்தும் அட்டையை எடுத்துச் செல்ல வேண்டும் என்பதை அரசாங்கம் கட்டாயப்படுத்தியுள்ளது.

'எனவே, மேற்படி கிராம சேவகர் பிரிவில் உள்ள சகலருக்கும் தடுப்பூசி ஏற்றுவதில் விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன், இது தொடர்பில் இ.தொ.கா பொதுச் செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் எம். ராமேஸ்வரன் ஆகியோரின் கவனத்துக்கும் கொண்டு வரப்பட்டுள்ளது' என்றார்.

> டிக்கோயா தோட்டம், தரவளை மேற்பிரிவு, தரவளை கீழ்ப்பிரிவு மற்றும் கொலனி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சுமார் 1,500 பேர் எந்த விதமான தடுப்பூசிகளையும் இதுவரை பெற்றுக் கொள்ளவில்லை

## பெருந்தலைவரின் 108ஆவது ஜனன தினம்


■ ஆ.ரமேஸ்

'இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்' எனும் ஆழமரத்தின் ஆணிவேர் என நாமம் கொண்ட பெருந்தலைவர் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் ஐயாவின் 108ஆவது ஜனன தினம்; இன்று (30), ஆகும்.

ஒவ்வொரு வருடமும் மிகச் சிறப்பாக அனுஷ்டிக்கப்படும் ஐயாவின் ஜனன தினம், நாட்டில் நிலவியுள்ள கொரோனா தொற்று காரணமாக, இம்முறை எவ்விதமான அனுஷ்டிப்பு நிகழ்வுகளும் இடம்பெறவில்லை.

இருப்பினும் கொட்டக்கலை சி.எல்.எஃப்பில், அமரர் சௌமியமூர்த்தி ஐயாவின் குடும்பத்தினரால் மாத்திரம் உருவப்படத்துக்கு மாலை அணிவித்து, மரியாதை வழங்கப்படவுள்ளதாக, காங்கிரஸ் தரப்பில் இருந்து தெரிவிக்கப்பட்டுள்ளது

இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மலையக மக்களின் காந்தீக கொள்கைவாதி தலைவராகவும் மலையக மக்களின் தந்தையாகவும் போற்றப்பட்ட தலைவர்களுள் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் ஐயாவுக்கு என்றும் மதிப்பு உள்ளது.



அமரர் கருப்பையா, சீதாம்மை ஆகியோருக்கு ஐந்தாவது பிள்ளையாகவும் ஒரே ஆண் பிள்ளையாகவும் 30.08.1913இல் பிறந்த சௌமியமூர்த்தி தொண்டமான் (ஐயா), 'ஆதவன்' எனும் பெயரில் செமியமூர்த்தி என்று குடும்ப நாமமான தொண்டமான் எனும் பெயர் கொண்டவர்.

இந்தியா - புதுக்கோட்டை பகுதியில், முன்னை புத்தூரில,; ராஜ பரம்பரையில் பிறந்த சௌமிய மூர்த்தி அவர்கள், 1924ஆம் ஆண்டு தனது 11ஆவது அகவையில், இலங்கைக்கு காலடி பதித்தார்.

அவர், தனது தந்தையின் பராமரிப்பில் இறம்பொடை - வேவண்டன் தோட்டத்தில் பூர்வீக இல்லத்தில் வசித்து வந்தார். தனது 14ஆவது வயதில், கம்பளை புனித அந்திரேயர் கல்லூரியில் தனது கல்வியை தொடர்ந்துள்ளார்.

1927ஆம் ஆண்டு, கண்டிக்கு விஜயம் மேற்கொண்டு வருகை தந்த மகாத்மா காந்தியடிகளின் தீவிர பற்றாளராக விளங்கிய செமியமூர்த்தி ஐயா அவர்கள், காந்தியடிகள் உரையில் இந்தியாவில் இருந்து தோட்டப் பகுதிகளுக்கு பணியாட்களாக வரவழைக்கப்பட்ட தொழிலாளர்கள் மீது, தனிப்பட்ட கவனம் செலுத்தப்பட வேண்டும் என அன்னாரால் ஆற்றப்பட்ட உரை, சௌமியமூர்த்தி தொண்டமான் ஐயாவின் வாழ்வில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதை தொடர்ந்து, கல்வி கற்று வந்த காலப் பகுதியை தொடர்ந்து, இந்திய விடுதலை இயக்கத்தில் கடும் ஈடுபாடு கொண்டு சௌமியமூர்த்தி (ஐயா), காந்தீக கொள்கைவாதியாக செயற்பட்டுள்ளார்.

இவர் அரசியல், பொது சேவை ஆகியவற்றில் ஈடுபடுவது, அவரின் தந்தை கருப்பையாவுக்கு விருப்பம் இல்லாமலேயே இருந்ததாக கூறப்படுகிறது.

1930ஆம் ஆண்டு காலப்பகுதியில், ஹட்டனில் இயங்கிய காந்தி சேவா சங்கத்தில், அக்கால இளம் தலைவர்களான இராசலிங்கம் மற்றும் வெள்ளையன் ஆகியோருடன் காந்தி பற்றாளராகவும் செல்வந்த இளைஞராகவும் சௌமியமூர்த்தி தொண்டமான் ஐயா செயற்பட்டு வந்துள்ளார்.

இக்காலப்பகுதியில், சுபாஸ் சந்திரபோஸ் சங்கத்திலும் இயங்கிய சௌமியமூர்த்தி (ஐயா), முதல் மேடையில் கன்னியுரை நிகழ்த்தியும் உள்ளார்.

1932ஆம் ஆண்டு, தனது தாயாலும் சகோதரியாலும் பார்க்கப்பட்ட அன்னை கோதை அம்மையாரை திருமணம் முடித்துள்ளார்.

24.07.1939ஆம் ஆண்டு இந்திய முன்னாள் பிரதமர் ஜவஹர்லால் நேரு இலங்கைக்கு வருகை தந்திருந்த நிலையில், அவரால் இலங்கை இந்திய காங்கிரஸ் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதில் இணைந்து பயணித்த சௌமியமூர்த்தி அவர்கள், கம்பளை கிளை தலைவராக 13.08.1939இல் தெரிவு செய்யப்பட்டு, இந்தியாவிலிருந்த தோட்டத் தொழிலாளர் மக்களுக்கு சேவைகளை செய்ய வேண்டுமென பதவியை ஏற்றுக்கொண்டுள்ளார்.

1940ஆம் ஆண்டு, சௌமியமூர்த்தி தொண்டமான் ஐயாவின் தந்தை கருப்பையா காலமானார்.

இதன் பின்னர், மக்கள் சேவைக்காக தன்னை அர்ப்பணித்து வரத் தொடங்கிய நிலையில், இந்திய எதிர்ப்பலை காரணமாக இலங்கை - இந்திய காங்கிரஸ் ஊடாக மக்களின் பிரச்சினைகளை அனுகவேண்டி வந்துள்ளதால், அனேகமான மக்கள் காங்கிரஸில் இணைந்துள்ளனர்.

இதன் போது, தோட்டத் தொழிலாளர் மக்களின் பிரச்சினைகளை அரசியல் கட்சியுடன் பேச முடியாது, தொழிற்சங்கத்துடன் மாத்திரமே பேசமுடியும் என்ற நிலையை தோட்ட நிர்வாகிகள் அறிவிக்க, 1940ஆம் ஆண்டு மே மாதம், இலங்கை - இந்திய காங்கிரஸில் தொழிற்சங்க பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தலைவராக சௌமிய மூர்த்தி தொண்டமான் (ஐயாவும்) செயலாளராக இடதுசாரி கொள்கையில் பயணித்த அப்துல் அஸீஸ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், 08.09.1940இல் இலங்கை - இந்திய காங்கிரஸின் முதல் தொடக்க விழா, கம்பளையில் எடுக்கப்பட்டு, அதை சௌமியமூர்த்தி தொண்டமான் தலைமை தாங்கி நடத்தியதே அவரின் முதல் அரசியல் விழாவாகும்.

இதன் இரண்டாவது விழா, கண்டியில், 1942இல் இடம்பெற்றும் உள்ளது. அதில், தலைவர் மாற்றமும் இடம்பெற்றுள்ளது. இதில் தோல்வி கண்ட சௌமிய மூர்த்தி தொண்டமான், 1945இல் நுவரெலியாவில் இடம்பெற்ற பொது குழுவில் வெற்றிபெற்று, இ.இ.காங்கிரஸில் தலைவராக நியமனமும் பெற்றுள்ளார்.

சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களின் அரசியல், தொழிற்சங்க பொது பணியில் 1946இல,; கேகாலை பிரதேசத்தில், 360 குடும்பங்களுக்கு நில உரிமை பெற்று கொடுத்த 21 நாள்கள் போராட்டமே முதல் போராட்டமாகும். அத்துடன், முள்ளோயா போராட்டமும் முக்கிய பங்காகும்.

இவ்வாறு மக்கள் சேவையில் இடம்பிடித்த ஐயா, 1947இல் இடம்பெற்ற 95 பாராளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்யும் தேர்தலிலும் வெற்றி பெற்றுள்ளார். இதன்போது, நுவரெலியாவில் இவர் 9368 வாக்குகளைப் பெற்றுள்ளார்.

தொடர்ந்து, இலங்கை 1948இல் சுதந்திரம் பெற்ற பினனர்; எழும்பிய இந்திய - பாக்கிஸ்தான் குடியுரிமை பறிப்புக்கு எதிராக பாராளுமன்றத்தில் வாதப் பிரதிவாதங்களிலும் ஈடுபட்ட அவர், குடியுரிமை சட்டத்துக்காக பிரதமர் வாசஸ்தளத்தில் சத்தியாகிரகப் போராட்டத்தையும் பேரணியையும் நடத்தியுள்ளார்.

இதையடுத்து, அடுத்து வந்த 1950 காலப் பகுதி தேர்தலில,; பாராளுமன்ற அங்கத்துவம் இழக்கப்பட்டப் பின்னர், 1977இல் மீண்டும் ஒரே ஒரு தமிழராக பாராளுமன்றத்துக்குத் தெரிவாகி, 1999ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் அவர் இறக்கும் வரை, பாராளுமன்ற உறுப்பினராகவும் கிராமிய கைத்தொழில், கால்நடை வளர்ப்பு துறை போன்ற அமைச்சிகளில் அமைச்சராகவும் இருந்துள்ளார்.

தோட்டப் பகுதி கல்வியை அரசுடமையாக்கியதில் பெரும் பங்காற்றியவர். நில உரிமை போராட்டங்கள், தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமை போராட்டங்கள், சம்பள உயர்வு போராட்டங்கள் எனப் பல போராட்டங்களையும் அபிவிருத்திகளையும் தொழில்வாய்ப்புகளையும் கைத்தொழில் முயற்சகஙளையும் படிப்படியாக முன்னெடுத்து, மலையக மக்கள் மனதில் இன்றும் நீங்காத இடம்பிடித்துள்ளார்.

1958ஆம் ஆண்டில், தலைவர் அப்துல் அஸீஸ் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸை ஆரம்பித்தப் பினனர், இலங்கை - இந்திய காங்கிரஸ், இலங்கை ஜனநாயக காங்கிரஸ் என மாற்றப்பட்டு, அந்தத் தொழிற்சங்கப் பிரிவு, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என ஆரம்பிக்கப்பட்டது.

இதற்கு தலைவராக சௌமியமூர்த்தி தொண்டமான் நியமனம் பெற்றார். பின்னர் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் எனும் பெயரில், அரசியல் மற்றும் தொழிற்சங்கக் கட்சி என்ற ரீதியில், அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் ஸ்தாபக தலைவராக கொண்டு இன்றுவரை இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் செயற்படுகிறது.

இந்த நாட்டில், இந்திய வம்சாவளி மக்களின் பாதுகாப்பு தலைவராகவும் உரிமைகள் பலவற்றை பெற்றுக்கொடுத்து மலையக மக்கள் மனதில் தெய்வமாக வாழும் (ஐயா) சௌமியமூர்த்தி தொண்டமானின் நினைவுகளுடன் அவரின் 108வது ஜனன தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

LK Newspapers Viber Community

# இனி கண்ணீரில்லை; உறவுகளுக்கு வேண்டியது பதில்

வருடமொன்றின் ஒவ்வொரு மாதத்திலும் ஏதாவதொரு முக்கியமான நாளிருக்கும். சில மாதங்களில் இரண்டுக்கும் மேற்பட்ட முக்கியமான நாட்கள் இருக்கும். இரண்டு, மூன்று விடயதானங்கள் ஒரே நாளில் வந்திருக்கும். அதில், பல ஞாபகங்களில் நிற்காது. இன்னும் சில நாட்கள் பலருக்கும் பிரயோசனமற்றதாய் அமைந்திருக்கும்.

ஆனால், இன்று (ஓகஸ்ட் 30) காணாமல் ஆக்கப்பட்டோரை நினைவு கூரும் சர்வதேச தினம். உலகளாவிய ரீதியில் அனுஷ்டிக்கப்படும் இந்நாள், காணாமலாக்கப்பட்டோருக்கானது. யுத்த காலங்களிலேயே பலரும் காணாமலாக்கப்பட்டுள்ளனர்.

நமது நாட்டை பொறுத்தவரை, யுத்தம் நிறைவடைந்து பன்னிரண்டு ஆண்டுகள் உருண்டோடிவிட்டாலும், இறுதி யுத்தத்தின்போது, படையினரிடம் தாங்கள் கையளித்த உறவுகளுக்கு என்ன நடந்தது எனத் தெரியாமல், சதாகாலமும் நினைத்து, நினைத்து அழுதுகொண்டிருக்கும் உறவுகள் வடக்கு, கிழக்கில் உள்ளனர்.

எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள், கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டங்கள், உண்ணாவிரதம், உள்ளிட்ட பல்வகைத்தன்மையுடன் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களில் பங்கேற்றிருந்த, காணாமலாக்கப்பட்ட உறவுகளின் உறவினர்கள் பலர், உறவினர்களைத் தேடித்தேடியே மரணமடைந்துவிட்டனர். இன்னும் சில சம்பவங்களுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளின் விசாரணைகள் நிலுவையில் உள்ளன.

ஆனால், சதாகாலமும் நினைத்துக் கொண்டிருப்போரின் கண்களிலிருந்து சொரிந்த கண்ணீர் வற்றிவிட்டது. அழுவதற்குக் கண்ணீர் இல்லாமல், உறவுகளைத் தேடிக்கொண்டிருப்போரின் போராட்டம் இக்கொரோனா காலத்தில் கொஞ்சம் அமைதியடைந்துள்ளது.

அதேபோல, சர்வதேசத்தின் காதுகளுக்குக் கேட்கும் வகையில், வடக்கு, கிழக்கிலிருந்து குரல் எழுப்பமுடியாத துர்ப்பாக்கிய நிலைமையொன்றே இவ்வருடம் உள்ளது.

ஐ.நா மனித உரிமை பேரவையின் கூட்டத்தொடர் ஆரம்பிக்கும் காலத்தில் மட்டுமே, காணாமலாக்கப்பட்டோர் தொடர்பில் கரிசனை காட்டுவதாக உலகுக்கே படம் காட்டும் அரசாங்கங்கள், அக்கூட்டத்தொடருக்கும் பின்னர், காணாமலாக்கப்பட்டோர் விவகாரத்தை தெரிந்தே மறந்துவிடுகின்றன.

இந்நிலையில், காணாமலாக்கப்பட்டோருக்கான அலுவலகமொன்று எவ்விதமான அறிவிப்புகளும் ஆர்ப்பரிப்புகளும் இன்றி, வடக்கில் திடீரென முளைத்துள்ளது. இதுகூட, செப்டெம்பரில் நடைபெறவிருக்கும் ஐ.நா கூட்டத்தொடருக்குப் படம் காட்டுவதற்காக இருக்கக்கூடும்.

படையினரிடம் தாங்களாகவே முன்வந்து ஒப்படைத்த, தங்களுடைய உறவினர்களுக்கு என்ன நடந்தது என்பதைக் கூறுவதற்கு, காலத்தை கடத்தவேண்டிய அவசியமில்லை. காணாமல் போயிருக்கும் பலர், நாட்டைவிட்டுத் தப்பியோடிவிட்டனர் என, பிடிகொடுக்காத பதிலை அல்ல, பொறுப்பான பதிலை வழங்கவேண்டியதே அரசாங்கத்தின் தார்மீக பொறுப்பாகும்.

உறவுகளைத் தேடித் தேடியே சோர்ந்து போயிருக்கும் உறவுகளிடத்தில், அழுது புலம்புவதற்கு இனியும் கண்ணீரில்லை. உரிமைக்காக குரல்கொடுப்பதையும் கொரோனா தடுத்தாட்கொண்டுள்ளது. வீடுகளிலேயே முடங்கியிருந்து வேதனைப்படுவதைத் தவிர, அவர்களிடத்தில் வேறு வழிகளே இல்லை.

காலத்தையும் நேரத்தையும் கடத்தாமல், உறவுகளைத் தேடிக்கொண்டிருக்கும் உறவுகளுக்கு ஒரு பதிலை வழங்கினால், அவர்களது மிச்ச வாழ்க்கையாவது நிம்மதியாக இருக்கும். அதற்காக, இன்றைய நாளிலேனும் அரசாங்கம் உறுதிபூண்டு கொள்ள வேண்டும்.


## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

நான், எனக்கு, எல்லாமே எனக்கானது என்றால் மற்றையவர்களின் நிலை என்ன? தன்னைத்தான் உயர்த்துவதற்காகப் பிறரின் உரிமைகளை, நான், எனது எனும் மமதையுடன் எவரது உரிமைகளுக்குள் உள்நுழைவது சுத்த அபத்தம்!

"வளர்ச்சி" என்பது தனது முயற்சியால், எவர் நிலையையும் ஊறுபண்ணாமல் வாழும் முறைமையாகும். முன்னேற்றம் என்பது பிறரைப் பின்னுக்குத் தள்ளுவதுமல்ல.

வாழ்க்கைச் சுழற்சியில் பல விடயங்கள் வந்து போகலாம். அதுபடற்றியே பேசாமல் நடக்கின்ற காரியங்களை மட்டும் நோக்குக. அவற்றை நேர் வழியில் வாழ்ந்து காட்டுக!

நாங்கள் எவரையும் நிந்திக்காமல் யாவதுமே தேவையானவர்கள் என எண்ணியபடி வாழ்ந்தால் யாவரும் எங்களுடன் இணைந்து கொண்டேயிருப்பார்கள்.

உலகம் எமக்குப் பாரம் இல்லை. நாங்கள் பூமிக்கும் பாரமாக இருக்கலாகாது. வளர்த்த உலகை வாழ்விக்க சேவை செய்க.!

பொது வெளியில் எங்களை பிறர் உயர்நிலையில் பார்க்க முயற்சி எடுக்கத் தேவையில்லை. இயல்பாகவே, பொது நோக்குடன் உதவும் எண்ணங்களுடன் வாழ்ந்தாலே போதும். நல்லதே நடக்கும். உபகாரம் செய்தலே யோகம்.

பருத்தியூர் பால-வயிரவநாதன்

## கடிதங்கள்

### வயலை தின்னும் மணல்

கிளிநொச்சியில் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்ற சட்டவிரோத மணல்அகழ்வினால் தங்களுடைய வயல் காணிகளையும் இழந்து வருவதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

மழையை மட்டும் நம்பி ஒரு போகம் விதைப்பில் ஈடுப்படுகின்ற விவசாயிகளின் வயல் நிலங்களில் சட்டவிரோதமான முறையில், பாரியளவிலான குழிகள் வெட்டப்பட்டு மணல் அகழ்வுகள் இடம்பெறுகின்றமையால் குறித்த காணிகளை விவசாய நடவடிக்கைகளுக்கு பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என அந்த விவசாயிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

கரைச்சியில் ஊற்றுப்புலம், சிவநகர், பன்னங்கண்டி, உமையாள்புரம், தட்டுவன்கொட்டி, கண்டாவளையில் பெரியகுளம், கண்டாவளை, நாகேந்திரபுரம், கல்லாறு, போன்ற பிரதேசங்களில் இவ்வாறு சட்டவிரோத மணல் அகழ்வினால் வயல் நிலங்களை விவசாயிகள் இழக்க நேரிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ், இராணுவம் மற்றும் அதிகாரிகளின் கவனங்களுக்கு பல தடவைகள் கொண்டு சென்ற போதும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவிக்கும் விவசாயிகள். சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுப்படுகின்றவர்களை தங்களால் தடுக்க முடியாதுள்ளதாகவும் மீறி தடுத்தால் அல்லது தட்டிக் கேட்டால் வாள் வெட்டுக்கு இலக்காக நேரிடுகிறது என்றும் கூறுகின்றனர்

மு. தமிழ்ச்செல்வன்

# இழப்பிலிருந்து மீள்தல்



என்.கே.அஷோக்பரன்

கொவிட்-19 பெருந்தொற்றினாலான இறப்புக்கள் தினசரி 200 என்பதைத்தாண்டி சென்றுகொண்டிருக்கிறது. தற்போதைய சூழலில் தினசரி 4000-ற்கும் அதிகமானவர்கள் தொற்றாளர்களாக அடையாளங்காணப்பட்டு வருகிறார்கள். இது நடத்தப்படும் பரிசோதனைகளின் அளவிலான தரவு மட்டுமே. தொற்று இலங்கையில் பரவத்தொடங்கியது முதல் இதுவரை ஏறத்தாழ நான்கு இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் நோய்த்தொற்றாளர்களாக அடையாங்காணப்பட்டுள்ளதுடன், இந்த பெருந்தொற்று இலங்கையில் மட்டும் இதுவரை எட்டாயிரத்திற்கும் அதிகமான மனித உயிர்களை பலியெடுத்துள்ளது. "நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும் பெருமை உடைத்துஇவ் வுலகு" என்ற வள்ளுவன் வாக்கினை அன்றாட வாழ்வில் தினம் தினம் கண்ணூடாகக் காணும் நிலையை கொவிட்-19 பெருந்தொற்று உருவாக்கியிருக்கிறது.

கொடிய பெருந்தொற்று நோயும், அதனாலான மரணங்களும் ஒருபுறம் இலங்கையை வாட்டிவதைக்க, மறுபுறத்தில் முடக்கமும் அதனாலான விளைவுகளும், பணவீக்கமும், பொருளாதார நெருக்கடியும் இலங்கை மக்களை இன்னும் அதிகமாகப் பாதித்துக்கொண்டிருக்கிறது என்று சொன்னால் அது மிகையல்ல. பெருந்தொற்றிலிருந்து பாதுகாப்பதற்காக நாட்டை முடக்குவது அவசியமாகிறது. மாதச் சம்பளத்திற்கு அரசசேவையிலும், தனியார் நிறுவனங்களிலும் உள்ளவர்களால் இதனை ஓரளவு சமாளிக்கக் கூடியதாக இருக்கிறது. அரசசேவைக்கான சம்பளத்தை பணநோட்டுக்களை அச்சடித்தேனும், பணவீக்கம் பற்றியும், அதன் விளைவுகள் பற்றியும் கரிசனங்கொள்ளாது அரசாங்கம் வழங்கிவிடும். தனியார் நிறுவனங்கள் சம்பளக்குறைப்புக்களை மேற்கொண்டாலும், அவற்றால் முடிந்தவரையில் சம்பளங்களை வழங்கிவிடும். முடியாதபட்சத்தில் நிறுவனத்தை மூடுவதைவிட அவற்றிற்கு வேறு வழியில்லை. அதன் விளைவு வேலையிழப்பு. ஆனால் இவர்களை விட நாடு முடக்கப்படுவதால் உடனடியாகப் பாதிக்கப்படுபவர்கள் அன்றாடத் தொழிலை தமது வாழ்வாதாரமாகக் கொண்ட மக்களே. அன்றாடத் தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்ட மக்கள் என்று சொன்னதும் பலரும் முச்சக்கரவண்டி சாரதிகளும், கூலித்தொழிலாளர்களும், பெட்டிக்கடை நடத்துபவர்களும் தான் அன்றாடத் தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்டவர்கள் என்று எண்ணுகிறார்கள். அது தவறு. எத்தனையோ நிபுணத்துவ தொழிலாளர்கள் அன்றாடத் தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்டவர்கள். உதாரணமாக வழக்குரைக்கும் சட்டத்தரணிகளை எடுத்துக்கொண்டால், வழக்குரைப்பதற்குத் தான் அவர்களுக்கு சன்மானம் வழங்கப்படுகிறது. நாட்டின் முடக்கத்தினால் நீதிமன்றுகள் வழமைபோன்று இயங்காத நிலையில், அன்றாட வழக்குரைக்கும் தொழிலை நம்பி வாழும் அவர்களின் நிலையும் கவலைக்குரியதாகிறது. குறிப்பாக, தொழிலின் ஆரம்ப நிலையிலுள்ளவர்கள், சேமிப்போ, ஏனைய பொருளாதார பாதுகாப்புக்களோ இல்லாதவர்களின் நிலை மிகுந்த கவலைக்குரியதாக இருக்கிறது.

இப்படி தொழில் மற்றும் வருமான ரீதியில் பெரும் இழப்புக்களை இலங்கையர்கள் சந்தித்துள்ள இந்த நிலையில்தான், அதனோடு சேர்ந்து இலங்கையர்களை இன்னும் வாட்டிவதைப்பதாக இலங்கையின் பொருளாதார நிலை உருவெடுத்திருக்கிறது. அடிப்படை தப்பிப்பிழைத்தலுக்கான உணவுப் பொருட்களின் விலைகள் கூட அதிரடியாக உயர்ந்திருக்கின்றன. தேசிய நுகர்வோர் விலைச்சுட்டியின் படியான பணவீக்கம் ஜூன் மாதத்தில் 6.1% அதிகரித்திருந்த நிலையில், ஜூலை மாதத்தில் அது 6.8% ஆக மேலும் அதிகரித்துள்ளது. அரசி, பருப்பு, சீனி, மரக்கறிகள் என உணவுப்பொருட்களின் விலை அதிகரிப்பு ஒருபுறமிருக்க, டொலர் கையிருப்பினைத் தக்கவைப்பதற்காக அரசாங்கம் முன்னெடுத்துள்ள இறக்குமதி கட்டுப்பாட்டு நடவடிக்கைகளினால் உணவுப்பொருட்களுக்கு தட்டுப்பாடு கூட ஏற்படும் நிலை வரலாம் என சில பொருளியலாளர்கள் கருத்துரைக்கிறார்கள். இலங்கையின் பணவீக்கத்தின் நிலை இலங்கை ரூபாய்களை வங்கிகளில் சேமிப்பதை பயனற்ற விடயமாக மாற்றியுள்ளது. வங்கிகள் தற்போது ஏறத்தாழ 3-4% சேமிப்பிற்கு வட்டிவழங்கும் நிலையில், பணவீக்கம் 6.8% ஆக உள்ள போது, ஒவ்வொரு வருடமும் சேமித்துள்ள பணத்தின் மதிப்பு குறைகிறது.

பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டுள்ளமை. ஒரு நாள் பாடசாலைக்கு செல்லாமல் இருப்பதே பெருஞ்சங்கடமான விடயமாக இருந்த காலம் போய், இன்று ஏறத்தாழ ஒன்றரை வருடங்கள் மாணவர்கள் பாடசாலையையே எட்டிப்பார்க்காத நிலையை கொவிட்-19 ஏற்படுத்தியிருக்கிறது. இது ஒரு சந்ததியையே நீண்டகாலத்தில் பாதிக்கும் விடயமாக அமையப்போகிறது. சிலர் இடையீடு செய்து இணையவழி கல்வி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்று குறிப்பிடலாம். இலங்கையில் இணையவழி கல்வி சார்ந்த குறைபாடுகள் பற்றி பலரும் எழுதிவிட்ட நிலையில், அதை மீளக்குறிப்பிடுதல் அவசியமில்லை. ஆனால் இங்கு இணைய வழிக்கல்வி முழுமையாக கல்விச்செயற்பாடாக கருதப்பட முடியாமைக்கு முக்கிய காரணம் அது இலங்கையின் இலவசக் கல்வி போல அனைவராலும் அணுக முடியாதிருப்பதாகும். இலவசக்கல்வி, இலவசப் பாடநூல்கள், இலவச சீருடை என்பவற்றை அனைவருக்கும் கல்வி அணுகப்படக்கூடியதொன்றாக உள்ள நாடாக இலங்கை இருக்கையிலே, இணையவழிக்கல்வி என்பது அந்த நிலையைத் தகர்ப்பதாக இருக்கிறது. அடிப்படையில் இலங்கையில் எல்லா இடத்திலும் திடமான இணையவசதி கிடையாது என்பது முதற்பிரச்சினை. இணையத்தினூடாக இணைந்து கல்வி பெறும் உபகரணங்கள் அனைத்துப் பிள்ளைகளிடமும் கிடையாது என்பது இரண்டாவது பிரச்சினை. இவற்றைத்தாண்டி, இணையவழி மூலம் முழுமையான கல்வியும், கல்வி அனுபவமும் வழங்கப்படமுடியுமா என்பது முக்கிய பிரச்சினை. இத்தனைக்கும் நடுவில்தான் இலங்கையின் எதிர்காலம் சிக்குண்டு சின்னா பின்னமாகிக்கொண்டிருக்கிறது.

இந்த நேரடிப்பிரச்சினைகளைத் தாண்டி, முடக்கநிலையானது மக்களிடையே பெரும் உளவியல் தாக்கங்களையும், பிரச்சினைகளையும் ஏற்படுத்தியிருக்கிறது. ஏலவே உளவியல் பிரச்சினைகளை பெருமளவு கண்டுகொள்ளாத நாடாக இலங்கை காணப்படுகிற நிலையில், இந்த முடக்கம் ஏற்படுத்தியிருக்கும் தாக்கமானது, பரவலான வகையில் இலங்கையர்களிடையே பெருமளவாக உளவியல் பாதிப்புக்களையும், சிக்கல்களையும் ஏற்படுத்தியிருக்கிறது இதன் விளைவுகள் எதிர்காலத்தில் நேரடியாகவும், மறைமுகமாகவும் உணரப்படலாம் என்பதோடு, இலங்கையில் ஒட்டுமொத்த ஆரோக்கியத்தை பாதிக்கும் முக்கியமான விடயமாக இது மாறாலாம் என்பதையும் நாம் கவனத்திற்கொள்ளுதல் வேண்டும்.

இந்த இடத்தில்தான் முக்கிய கேள்வி எழுகிறது. இத்தனை இழப்புக்களிலிருந்து மீள முடியுமா? மீள்வது எப்படி? இழப்புக்களிலிருந்து மீள்தல் என்பதுதான் மனித வரலாறே! இந்தப் பூமியின் ஆதிக்கம் மிகு உயிரினமாக மனிதன் மாறியது அவன் இழப்புக்களை சந்திக்காததனால் அல்ல, விழ விழ எழுந்துகொண்டேயிருக்கும் தன்மையினை அவன் கற்றுக்கொண்டதனால்தான். ஆனால் அதற்குள் ஒரு ரகசியமுண்டு. தனிநபர்களாக மனிதன் வாழ்ந்திருப்பானாயின், அவன் என்றோ அழிந்திருப்பான். மனிதன் கூட்டங்கூட்டமாக வாழ்ந்தான். ஒரு மனிதன் காயப்பட்டபோது, மற்றவன் அவனைத்தாங்கிக்கொண்டான். இந்த கூட்டமாக ஒருவரையொருவர் சார்ந்தும், ஆதரித்தும் வாழும் தன்மைதான் மனிதன் எனும் உயிரினம் ஆதிக்கம் பெற்றதன் இரகசியம். இன்று அதற்கான தேவை மீண்டும் உருவாகியுள்ளது. ஒருவரையொருவர் அரவணைக்க வேண்டிய காலம் இது.

இழப்புக்களிலிருந்து மீள்தல் என்பதற்கு அண்மைய உதாரணங்களே பல உள்ளன. இரண்டு அணுகுண்டுகளின் தாக்கத்தை சந்தித்த ஜப்பான் இன்று உலகின் பொருளாதார வல்லமைபெற்ற நாடுகளுள் ஒன்றாக முடியுமென்றால், இரண்டாம் உலக யுத்தத்தில் பெருந்தோல்விகண்டு சின்னாபின்னமான நிலையிலிருந்து ஜேர்மனி இன்று ஐரோப்பாவின் ஆதிக்க சக்தியாக உருவெடுத்துள்ளது என்றால், இழப்பிலிருந்து மீள்தல் என்பது முடியாத காரியமல்ல. ஆனால் இனவாதம் பேசிக்கொண்டு, தமது மக்களிடையே பிரிவினையைத் தூண்டிக்கொண்டு இந்த நாடுகள் இழப்பிலிருந்து மீளவில்லை. மாறாக தம்மக்களிடையே ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் உருவாக்கின. அதுதான் அடிப்படை. அடுத்ததாக, அடிப்படை அறிவுகூடு இல்லாத முழு முட்டாள் தலைவர்களைக் கொண்டு இந்த நாடுகள் தமது இழப்பிலிருந்து மீளவில்லை, மாறாக தம்மைப் பின்னிறுத்தி, நாட்டை முன்னிறுத்தும் தலைவர்களை, தலைமைக் குழுக்களைக் கொண்டதனால்தான் வெறும் சில தசாப்தங்களுள் பூச்சியத்திலிருந்து, பெரும் ராச்சியமாக அவை உருமாறின. 2ம் உலக யுத்தத்திற்கு பின்னரான ஜப்பானின் ஒரு தலைவரின் பெயரோ, ஜேர்மனியின் ஒரு தலைவரின் பெயரோ பலருக்கும் தெரியாது. ஆனால் அந்த நாடுகள் அந்தத் தலைமைகளின் கீழ் வளர்ச்சியடைந்தன. சுயநலங்கொண்ட, நாட்டைக் கொள்ளையடித்துப் பிழைக்கும், பொருளாதாரம், அபிவிருத்தி பற்றிய அடிப்படை அறிவுகூட இல்லாத, கடன்வாங்கி வீதிபோடுதல், நகரங்களை அழகாக்குதல் ஆகியவையே அபிவிருத்து என்று நம்பும் முழு முட்டாள் கூட்டத்திடம் நாட்டை ஒப்படைத்துவிட்டால், இழப்பிலிருந்து மீள்தல் என்பது வெறுங்கனவாகவே முடியும்.

சென்னை

வேளாண் சட்டங்களை எதிர்த்து தீர்மானம்

# எம்.எல்.ஏக்கள் வெளிநடப்பு

மத்திய அரசாங்கம் கொண்டு வந்துள்ள மூன்று வேளாண் சட்டங்களை எதிர்த்து, சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதற்கு ஆதரவு தெரிவித்து பாட்டாளி மக்கள் கட்சி பேசிய நிலையில், அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் (அ.தி.மு.க.) மற்றும் பாரதிய ஜனதா (பா.ஜ), - எம்.எல்.ஏ.,க்கள் வெளிநடப்பு செய்தனர்.



சட்டசபையில் நேற்றுமுன்தினம், மத்திய அரசாங்கத்தின் மூன்று வேளாண் சட்டங்களை ரத்து செய்யக் கோரும் அரசினர் தனி தீர்மானத்தை, முதலமைச்சர் ஸ்டாலின் முன்மொழிந்து . அவர் பேசியதாவது: மத்திய பா.ஜ., அரசாங்கத்தின் மூன்று வேளாண் சட்டங்களை ரத்து செய்ய வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றப் போகிறோம். இத்தகைய நெருக்கடியான சூழலை, மத்திய அரசாங்கதான் உருவாக்கியுள்ளது.

'வேளாண்மையை மேம்படுத்தவும், விவசாயிகளைக் காப்பாற்றவும், மத்திய அரசாங்கத்தால் கொண்டு வரப்பட்டதாக சொல்லப்படும் மூன்று வேளாண் சட்டங்களும், அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதாக இல்லை; வேளாண்மையை அழிப்பதாக இருக்கிறது' என, விவசாயிகள் சொல்கின்றனர். இத்தகைய சூழலில், மூன்று வேளாண் சட்டங்களையும் முழுமையாக எதிர்க்க வேண்டிய கடமை நமக்கு இருக்கிறது.

மாநில அரசாங்கத்தின் கட்டுப் பாட்டில் இருக்கும் ஒரு துறைக்கு, மாநில அரசாங்கங்களுடன் ஆலோசனை நடத்தாமல், தன்னிச்சையாக மத்திய அரசாங்கம் சட்டம் இயற்றியிருப்பது, கூட்டாட்சி தத்துவத்துக்கு விரோதமானது. அதனால் தான், அந்தச் சட்டங்களை நிராகரிக்க வேண்டியதாக இருக்கிறது. மூன்று சட்டங்களுமே வேளாண்மைக்கு எதிரானதாகவும், விவசாயிகள் மற்றும் நுகர்வோருக்கு பாதகமானதாகவும் அமைந்திருக்கின்றன.

புதுடெல்லி

எச்சரிக்கையாக இருக்கவும்

## ராகுலிடம் சீதாராம் தெரிவிப்பு



தேர்தல் வியூக நிபுணர் பிரசாந்த் கிஷோர் விரைவில் காங்கிரஸில் இணைவார் என்ற செய்தி மிகவும் பரபரப்பை ஏற்படுத்தியவேளை,பெரும் சர்ச்சையை ஏற்படுத்துமா என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், பிரசாந்த் கிஷோரிடம் மிகவும் எச்சரிக்கையாக இருக்கும்படி காங்கிரஸின் எம்.பி ராகுலிடம் மார்க்சிஸ்ட் பொதுச் செயலர் சீதாராம் யெச்சூரி கூறியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

'மம்தா பானர்ஜியின் ஏஜென்ட்டுதான் பிரசாந்த் கிஷோர். மறைமுகமாக பிரதமர் நரேந்திர மோடிக்கும் உதவி வருகிறார்' என, ராகுல் மற்றும் சோனியாவிடம் யெச்சூரி கூறியுள்ளதாக செய்திகள் வெளிவந்துள்ளன. இதேவேளை,யெச்சூரி தமிழில் பேசக்கூடியவர். தமிழக முதலமைச்சர் ஸ்டாலினிடமும், 'கிஷோரை நம்பாதீர்கள்' என அறிவுறுத்தியுள்ளார்.

மைசூர்

## கழிப்பிடத்துக்கு சென்றவர் சடலமாக மீட்பு

மைசூரு மாவட்டம் டி.நரசிபுரா தாலுகா மூகூறு கிராமம். அங்கே உட்கட்டமைப்பு வசதிகள் குறைந்த பிரதேசம் பெண்ணொருவர் கடந்த புதன்கிழமை மாலையில், கிராமத்தின் வெளியேயுள்ள, கழிப்பிடத்துக்கு சென்றுள்ளார். மிகநீண்டநேரமாகியபின் இரவாகியும் அவர் வீடு திரும்பாததால்,சந்தேகங்கொண்ட வீட்டார், பல இடங்களில் தேடினர். அவர் பற்றிய தகவல் கிடைக்கவில்லை. மறுநாள் வியாழக்கிழமை, ஹாயசஹள்ளி கிராமத்துக்கு செல்லும் வழியில், கால்வாய் அருகில் பாலத்தின் அடியில் சாக்கு மூடை ஒன்று கிடந்ததை பார்த்த சிலர், அருகில் சென்று பார்த்த போது, அதனுள் பெண் பிணம் இருந்ததை பார்த்து அதிர்ந்தனர். பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப் பட்டது. தொடர்ந்து விசாரணை நடந்து வருகிறது.

சென்னை

## எங்கு சென்றாலும் பெண்கள், பெண்களேதான்



பாராளுமன்ற மழைக்காலக் கூட்டத் தொடர் எதிர்க்கட்சிகளின் அமளிகளால் பெரும்பாலும் முடங்கியது. ஆனாலும்,இந்தக் கூட்டத் தொடர் புதிய நட்பை ஏற்படுத்தியுள்ளது. செய்தியாக வெளிவந்துள்ளன.

தொலைபேசி ஒட்டு கேட்பு விவகாரம், விவசாயிகள் பிரச்சினை என பாராளுமன்ற மழைக்காலக் கூட்டத் தொடர் அதகளப்பட்டது. எதிர்ப்பு பொது காப்பீட்டு நிறுவனங்களை தனியார்மயமாக்கும் மசோதாவுக்கு, தேசியவாத காங்கிரஸ், திரிணமூல் காங்கிரஸ், கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தன. இது ஒருபுறம் இருக்க, மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் மற்றும் தேசியவாத காங்கிரஸ், தலைவர் சரத் பவாரின் மகளும், எம்.பி.,யுமான சுப்ரியா சுலே இடையே புதிய நட்பு ஏற்பட்டுள்ளது.

பாரம்பரிய, பழங்கால நகைகள் மீது சுப்ரியாவுக்கு எப்போதும் ஓர் ஈர்ப்பு உண்டு. இந்நிலையில் நிர்மலா சீதாராமன் அணிந்து வந்த ஒரு 'நெக்லஸ்' அவருக்கு மிகவும் பிடித்து விட்டது.சபையில் அமளிகளுக்கு இடையே நிர்மலா சீதாராமனிடம் சென்று, அந்த நகை குறித்து விபரம் கேட்டுள்ளார். இது போன்ற பாரம்பரிய நகைகளை தன் பெற்றோர் கொடுத்ததாக கூறி, அதன் சிறப்புகளையும் நிர்மலா சீதாராமன் விளக்கியுள்ளார்.

அது முதல் இருவருக்கும் இடையே நட்பு அதிகரித்துள்ளது. காரியம் சாதிப்பு காங்கிரஸ், தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசாங்கம் இருந்தபோது, தி.மு.க.,வின் கனிமொழியுடன் மிகவும் நெருக்கமாக சுப்ரியா சுலே பழங்கி வந்தார்; அவர் வாயிலாக பல காரியங்களை சாதித்தார். தற்போது நிர்மலா சீதாராமனுடன் நட்புடன் உள்ளார்.'தந்தையைப் போலவே மிகவும் சாதுர்யமான அரசியல்வாதி சுப்ரியா.

புதுடெல்லி

நேருவின் புகைப்படம் இல்லாத சுதந்திர தினம்;

## காங்கிரஸ் கட்சி கடும் ஆட்சேபம்



நாட்டின் 75ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டம் தொடர்பான படத்தில் ஜவஹர்லால் நேருவின் புகைப்படம் இடம்பெறாததற்கு காங்கிரஸ் கட்சி கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

நம் நாட்டின் 75ஆவது சுதந்திர தினத்தையொட்டி, ஐ.சி.எச்.ஆர்., எனப்படும் இந்திய வரலாற்று ஆராய்ச்சி கவுன்சில் சிறப்பு புகைப்படத்தை வெளியிட்டுள்ளது. அதில் மஹாத்மா காந்தி, நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ், பகத் சிங், அம்பேத்கர், சர்தார் வல்லபபாய் படேல், ராஜேந்திர பிரசாத், மதன் மோகன் மாளவியா, வீர் சவார்க்கர் ஆகியோரின் புகைப்படங்கள் இடம்பெற்றுள்ளன.

ஆனால்,நாட்டின் முதல் பிரதமரான ஜவஹர்லால் நேருவின் புகைப்படம் இடம்பெறவில்லை. இதற்கு காங்கிரஸ் கடும் எதிர்ப்பும், ஆட்சேபமும் தெரிவித்துள்ளது. காங்கிரஸ், மூத்த தலைவர்கள் ஜெய்ராம் ரமேஷ், சசி தரூர், கவுரவ் கோகோய் உள்ளிட்டோர் இது தொடர்பாக சமூக வலைதளங்களில் தங்கள் அதிருப்தியை பதிவிட்டுஉள்ளனர்.

சுதந்திரத்துக்காக போராடிய, நாட்டின் முதல் பிரதமரான ஜவஹர்லால் நேருவின் புகைப்படம், 75ஆவது சுதந்திர தின கொண்டாட்டம் தொடர்பான படத்தில் இடம்பெறவில்லை. இது திட்டமிட்டு அரசியல் நோக்கத்தோடு செய்யப்பட்டுள்ளது. இது அராஜகமான போக்கு; மிகவும் அற்பதனமாக நடந்து கொள்கின்றனர். வரலாற்றை மாற்றி எழுத முயற்சி நடக்கிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மைசூரு

மாணவி மீது பாலியல் பலாத்காரம்;

## மதுவெறியர்கள் ஐவர் கைது




கர்நாடகாவின் மைசூரில், எம்.பி.ஏ., மாணவியைக் கும்பலாக பாலியல் பலாத்காரம் செய்ததாக தமிழகத்தைச் சேர்ந்த ஐந்து பேரை, பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கர்நாடகா மைசூர் நகரில் எம்.பி.ஏ., படித்து கொண்டிருந்த, 23 வயது மாணவி ஒருவர், தன் நண்பருடன், சாமுண்டி மலை அடிவாரத்தில் பேசிக் கொண்டிருந்தார். அப்போது, ஆறு பேரடங்கிய கும்பலால் மாணவி பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டார்; அதன்போது நண்பரும் தாக்கப்பட்டார்.

இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது; அந்தக் கும்பல் மது அருந்தி விட்டு, தன்னை கற்கள் மற்றும் உருட்டுக் கட்டைகளால் அடித்து துன்புறுத்தியதாகவும், 3 இலட்சம் ரூபாய் கேட்டு மிரட்டியதாகவும் மாணவியின் நண்பர் பொலிஸாரிடம் தெரிவித்திருந்தார். தமிழ் கலந்த கன்னட மொழியில் அவர்கள் பேசியதாகவும் கூறினார்.

சம்பவம் நடந்த இடத்தில் தமிழகத்தின் சத்தியமங்கலத்தில் உள்ள தாளவாடியிலிருந்து, அந்த கும்பல் வந்ததற்கான பஸ் டிக்கெட் கிடைத்தது. இதன் மூலம் கூட்டு பாலியல் பலாத்காரம் செய்தவர்கள் தமிழகத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம் என பொலிஸார் சந்தேகித்தனர். அவர்கள் கேரளாவுக்கு தப்பி சென்றிருக்கலாம் என கருதினர். மொபைல் நெட்வொர்க் தகவல்களை ஆராய்ந்து பார்த்த போது, அவர்கள் தமிழகம் தப்பி சென்றது உறுதியானது.

இதையடுத்து, கர்நாடக - தமிழக எல்லையான ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலத்தின் தாளவாடி பகுதியின் சூசைபுரத்தைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டார். அவரை இரகசிய இடத்துக்கு அழைத்து சென்று விசாரித்த போது, திருப்பூர்மாவட்டம் அவிநாசி அருகே மற்றவர்கள் பதுங்கியிருப்பது தெரிய வந்தது. அங்கு சென்ற பொலிஸார், நான்கு பேரைக் கைது செய்தனர்.

அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கு தட்டுப்பாடு

# அந்நியச் செலாவணி நெருக்கடியும் தாக்கம்

### உடனடியாக தீர்வு வேண்டும் – தனியார் துறை இறக்குமதியாளர்கள் அரசிடம் வேண்டுகோள்

ச.சேகர்







அந்நியச் செலாவணி நெருக்கடி மற்றும் அரசாங்கத்தின் முறையற்ற நிர்வாகம் போன்ற பல்வேறு காரணிகளால் நாட்டில் அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்காக தட்டுப்பாடு ஏற்படும் என தனியார் துறை எதிர்வுகூறியுள்ளது.

சீனி, பால் மா, டின் மீன், பருப்பு மற்றும் கோதுமை மா போன்றன தற்போது ஒரு மாதத்துக்கு போதுமான அளவு மாத்திரமே நாட்டில் கையிருப்பிலுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாழ்க்கைச் செலவு தொடர்பான உப குழுவுடன் இடம்பெற்ற சந்திப்பின் போது இந்த விடயம் குறித்து பேசப்பட்டிருந்தது. இதில் தற்போது கொவிட் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ள வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன, நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன மற்றும் இதர உயர்நிலை அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர். இந்த சந்திப்பு மெய்நிகர் கட்டமைப்பில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

அளவுக்கதிகமான தலையீடு, டொலர் பற்றாக்குறை, ரூபாய் பெறுமதி இறக்கம் மற்றும் போது போதியளவு கையிருப்பு இன்மை போன்றன சந்தையில் இந்தப் பொருட்களின் விலை அதிகரிப்புக்கு காரணமாக அமைந்துள்ளன.

விலைக்கட்டுப்பாடு விதிக்கின்றமை, இறக்குமதிக் கட்டுப்பாடு விதிக்கின்றமை மற்றும் வளங்களின் ஒதுக்கீடு போன்ற அரசாங்கத்தின் கட்டுப்பாடுகள் காரணமாக சந்தையில் பெரும் நெருக்கடியான நிலை ஏற்பட்டுள்ளது. என அத்தியாவசிய உணவுப் பொருட்கள் இறக்குமதியாளர்கள் சங்கத்தின் பேச்சாளர் தெரிவித்தார்.

அவ்வாறான நடவடிக்கைகள் காரணமாக பாரிய பிரச்சனைகளுக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்படும் என்பது தொடர்பில் வாழ்க்கைச் செலவு தொடர்பான சந்திப்புகளின் போது இறக்குமதியாளர்கள் சுட்டிக்காட்டியிருந்த போதிலும், தமது கோரிக்கைகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் போதியளவு கவனம் செலுத்துவதில்லை என தெரிவித்தார்.

மே மாதம் முதல் அரசாங்கம் சீனி இறக்குமதியை இடைநிறுத்தியுள்ள நிலையில், நுகர்வுக்கு அவசியமான புதிய இறக்குமதிகளை மேற்கொள்வதற்கு அரசாங்கம் எவ்விதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை என சுட்டிக்காட்டப்பட்டது.

இவ்வாறான சவால்களுக்கு மத்தியில், சீனி, அரிசி மற்றும் பருப்பு போன்றவற்றை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

கடந்த மாதம் 2500 மெட்ரிக் டொன் சீனியை மாதாந்த அடிப்படையில் இறக்குமதி செய்ய அரசாங்கம் தீர்மானித்தது. இந்தியாவிலிருந்து சீனி இறக்குமதி செய்யப்படும் என்பதுடன், அவுஸ்திரேலியாவிலிருந்து பருப்பு இறக்குமதி செய்யப்படும். இதற்காக கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்தின் ஒதுக்கீடுகள் பயன்படுத்தப்படும்.

ஜுன் மாதத்திலும் அரசாங்கத்தினால் 100,000 டொன் சம்பா அரிசி இறக்குமதிக்கு அமைச்சரவை அனுமதியளித்திருந்தது. கடந்த வாரத்திலும், 6000 டொன் அரிசியை பாகிஸ்தான் திறந்த வர்த்தக உடன்படிக்கையின் பிரகாரம் உடனடியாக இறக்குமதி செய்ய தீர்மானிக்கப்பட்டது.

அத்தியாவசிய உணவுப் பொருட்களை போதியளவு கையிருப்பில் வைத்திருப்பது மற்றும் உள்நாட்டு சந்தையில் விலையை உறுதியாகப் பேணுவது போன்றவற்றுக்காக இறக்குமதிக்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக அரசாங்கம் தெரிவித்தது.

மாதாந்தம் 50 டொன் சீனி தேவைப்படுவதாக இறக்குமதியாளர்கள் தெரிவித்திருந்ததுடன், சுமார் 25 டொன் சீனி தற்போது கொழும்பு துறைமுகத்தில் தடைப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.

கடந்த ஆறு மாத காலப்பகுதியில், நாட்டில் சுமார் 600,000 டொன் சீனி இறக்குமதி செய்யப்பட்டதாகவும், இது ஒரு ஆண்டு காலப்பகுதிக்கு நுகர்வுக்கு போதுமானதாகும் எனவும் தெரிவித்தனர். இதன் பெறுபேறாக, தற்போது நாட்டில் 120,000 டொன் சீனி கையிருப்பிலுள்ளதாகவும் குறிப்பிட்டனர். இலங்கை வருடமொன்றில் சராசரியாக 350,000 - 400,000 டொன் சீனியை நுகர்கின்றது.

சாமி வரம் கொடுத்தாலும், பூசாரி வரம் கொடுப்பதில்லை என்பதைப் போல, இறக்குமதி செய்ய அரசாங்கம் அனுமதியளித்தாலும், வங்கிகள் அதற்கான ஆதரவை வழங்குவதில்லை, இதற்கு காரணம் போதியளவு டொலர்கள் கையிருப்பில் இல்லாமை என இறக்குமதியாளர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

பரிமாற்ற ஒப்பந்தங்களை மேற்கொள்வதற்கு எமக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. 10 முதல் 15 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான கட்டணப் பட்டியல்கள் செலுத்தப்பட வேண்டியுள்ளன. சில கட்டுப்பாடுகளை அரசாங்கம் தளர்த்தி, விநியோகம் மற்றும் கேள்விக்கேற்ப விலை தீர்மானிக்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும். துரிதமாக செயலாற்ற தவறுகின்றமையால், நாடு பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுக்க நேரிடும் என எச்சரித்துள்ளனர்.

நுகர்வோர் உரிமைகள் பாதுகாப்பு தேசிய அமைப்பின் தலைவர் ரஞ்சித் விதானகே குறிப்பிடுகையில், நுகர்வோர் அதிகார அமைப்பினால் நிர்ணயிக்கப்பட்டுள்ள விலைக் கட்டுப்பாட்டு பொறிமுறை என்பது வினைத்திறன் அற்றதாக அமைந்துள்ளது. விற்பனையாளர்கள் பொருட்களை தமக்கு வேண்டியவாறு உயர்ந்தளவில் விற்பனை செய்கின்றனர். அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட விலை நிர்ணயம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல்களை கவனத்தில் கொள்வதில்லை என்றார்.

சீனி ஒரு கிலோகிராம் 210 ரூபாய்க்கு அதிகமாக விற்பனை செய்யப்படுகின்றது. சம்பா அரிசி 230 முதல் 240 ரூபாய் வரையும், பருப்பு 250 ரூபாயாகவும் விற்பனையாகின்றது. மரக்கறி விலைகளும் அதிகரித்துள்ளன. பொருளாதார மத்திய நிலையங்களில் விற்பனையாகும் விலையை விட சுமார் பத்து மடங்கு அதிகமாக மரக்கறிகளை விற்பனை செய்கின்றனர். அரசாங்கம் அதியுயர் சில்லறை விலையை நிர்யணித்துள்ள போதிலும், அவற்றை வினைத்திறன் வாய்ந்த வகையில் ஒழுங்குபடுத்த அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்றார்.

அடுத்த சில வாரங்களில் அத்தியாவசிய பொருட்களின் விலை மேலும் அதிகரிக்கும் என விதானகே குறிப்பிட்டார். நுகர்வோர் உரிமையை பாதுகாக்க வேண்டிய பிரதான அமைப்பாக அமைந்துள்ள நுகர்வோர் விவகார அதிகார சபை, தமது கடமையைச் செய்யத் தவறியுள்ளது. இறக்குமதியாளர்களிடமிருந்து மொத்த வியாபாரிகளுக்கு அளவுக்கதிகமான இலாபத்துடன் பொருட்களை விற்பனை செய்ய அனுமதியளித்துள்ளது. இவர்கள் நுகர்வோருக்கு உயர் விலைக்கு விற்பனை செய்கின்றனர். இதனால் கட்டுப்பாட்டு விலையை விட உயர்வான விலைக்கே நுகர்வோர்கள் அத்தியாவசிய பொருட்களை கொள்வனவு செய்கின்றனர் என்றார்.



LK Newspapers Viber Community

ஆப்கானிஸ்தான்

# உயிரிழப்புக்கள் 170 ஆக அதிகரிப்பு

## மீண்டும் தாக்குதல் நடக்கலாம்; பைடன் எச்சரிக்கை





ஆப்கானிஸ்தானை தலிபான்கள் கைப்பற்றியுள்ள நிலையில் அங்கு சிக்கியுள்ள தங்கள் நாட்டுக் குடிமக்களை அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட பல நாடுகள் விமானம் மூலம் மீட்டு வருகின்றன.

சொந்த நாட்டை விட்டு வெளியேற நினைக்கும் ஆப்கான் மக்களையும் சில நாடுகள் மீட்டு வருகின்றன. இதற்காக காபூல் விமான நிலையத்தை அமெரிக்கப் படைகள் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளன.

இந்நிலையில் காபூல் விமான நிலையத்தைக் குறிவைத்து ஐ.எஸ். பயங்கரவாதிகள் கடந்த 26 ஆம் திகதி குண்டு வெடிப்பு தாக்குதல் ஒன்றை நடத்தியுள்ளனர்.


இவ்விமான நிலையத்தின் நுழைவாயிலில் ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பின் ஹரசன் பிரிவு பயங்கரவாதியால் நடத்தப்பட்ட தற்கொலைப்படைத் தாக்குதலில் பலியானோர் எண்ணிக்கை 170 ஆக அதிகரித்துள்ளது.

உயிரிழந்தவர்களில் 13 பேர் அமெரிக்க பாதுகாப்பு படையைச் சேர்ந்த வீரர்கள் ஆகும். எஞ்சியோர் ஆப்கானிஸ்தான், பிரித்தானியா உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்தவர்கள் ஆகும்.

இந்நிலையில், ஆப்கானிஸ்தானில் உள்ள ஐ.எஸ். பயங்கரவாதிகளைக் குறிவைத்து நேற்று முன்தினம் (28)ஆளில்லா டிரோன் விமானம் மூலம் அமெரிக்கப் படையினர் வான்வெளித் தாக்குதல் நடத்தினர். இதில் முக்கிய பயங்கரவாதிகள் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் காபூல் விமான நிலையத்தைக் குறிவைத்து மற்றொரு பயங்கரவாத தாக்குதல் நடைபெறலாம் என எதிர் பார்க்கப்படுவதாக அமெரிக்க ஜனாதிபதி பைடன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து இவ்விமான நிலையத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.




ரஷ்யா

## களைகட்டியது சர்வதேச இராணுவ இசைத் திருவிழா

ரஷ்யாவின் தலைநகர் மாஸ்கோவில் ஆண்டுதோறும் கொண்டாடப்படும் சர்வதேச இராணுவ இசைத் திருவிழா கடந்த 27 ஆம் திகதி கோலாகலமாக ஆரம்பமானது.

ரெட் ஸ்குயார் (Red Square ) பகுதியில் தொடங்கிய 14ஆவது இசைத் திருவிழாவானது எதிர்வரும் செப்டம்பர் மாதம் 5ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ரஷ்யா, மெக்சிகோ மற்றும் கிரீஸ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த இராணுவ வீரர்கள் பேண்ட் வாத்தியங்களுடன் அணிவகுத்தமை குறிப்பிடத்தக்கதாகும்.




தென் அமெரிக்கா

### கொட்டும் பனிக்கு மத்தியில்

## மலை உச்சியில் அரங்கேறிய திருமணம்

தென் அமெரிக்க நாடான பொலிவியாவில் திருமணத்தில் புதுமையை விரும்பிய ஒரு ஜோடி பனிமலை உச்சியில் தமது திருமணத்தை நடத்தியுள்ளனர்.

தலைநகர் லா பாஸ்-ன் மேற்கு பகுதியில் உள்ள இலிமானி மலையில் கொட்டிக் கிடக்கும் பனிக்கு மத்தியில் மூன்று நாட்கள் பயணித்த குறித்த ஜோடி ஒருவழியாக திருமணத்தை முடித்துள்ளனர்.

திருமணத்தில் கலந்து கொண்டவர்கள் உறைபனிகளைத் தூவி மணமக்களுக்குத் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து வெளியான புகைப்படங்கள் தற்போது இணையத்தில் வைரலாகி வருகின்றன.

அவுஸ்திரேலியா

### அம்பியூலன்ஸ் சேவைகளுக்கு

## கடும் தட்டுப்பாடு

அவுஸ்திரேலியாவில் கடுமையான ஊரடங்கு கட்டுப்பாடுகளுக்கு மத்தியிலும் கொரோனாத் தொற்றுப் பாதிப்புகள் அதிகரித்த வண்ணம் உள்ளன. இந்நிலையில் கடந்த வாரம் மாத்திரம் அம்பியூலன்ஸ் வாகனங்கள் வேண்டி 2,500 கொரோனாத் தொற்றாளர்கள் அழைப்பு விடுத்ததால் அம்பியூலன்ஸ் சேவைகள் ஸ்தம்பிதம் அடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக நியூ சவுத் வேல்ஸ் மாகாணத்தில் ஒரே நாளில் 1,035 பேருக்கு கொரோனா உறுதி செய்யப்பட்டதால் அம்பியூலன்ஸ் சேவைகளுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.






நைஜீரியா

### நைஜீரியாவில் கடத்தப்பட்ட

## 136 மாணவர்கள் விடுவிப்பு

மேற்கு ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் கடந்த சில மாதங்களாக பாடசாலைகளுக்குள் புகுந்து மாணவர்கள் கடத்தப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

அந்த வகையில் நைஜீரியாவின் மத்திய பகுதியில் அமைந்துள்ள நைஜர் மாகாணத்தில் உள்ள ஒரு பாடசாலையில் கடந்த மே மாதம் 30ஆம் திகதி 150-க்கும் மேற்பட்ட மாணவர்களை பயங்கரவாதிகள் கடத்திச் சென்றதோடு அவர்களை விடுவிக்க கப்பம் கோரியிருந்தனர்.

இதையடுத்து மாணவர்களின் பெற்றோர் மற்றும் பாடசாலை நிர்வாகம் இணைந்து ஒரு குறிப்பிட்ட தொகையைத் தயார் செய்தது.

ஆனால் அந்தத் தொகை போதுமானதாக இல்லை எனக் கூறி மாணவர்களை விடுவிக்க பயங்கரவாதிகள் மறுத்துவிட்டனர். அத்துடன் அத்தொகையை வழங்கச் சென்ற ஒரு நபரையும் கடத்தி வைத்துக் கொண்டனர்.

இந்நிலையில் கடத்திச் செல்லப்பட்ட மாணவர்களில் 6 பேர் உடல் நலக்குறைவு காரணமாக இறந்துவிட்டதாக அண்மையில் செய்திகள் வெளியாகியிருந்தன. இதனால் இம் மாணவர்களின் பெற்றோர் தமது பிள்ளைகளை விடுவிக்க உதவும்படி அரசிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்நிலையில், பிணைக் கைதிகளாக வைத்திருந்த 136 மாணவர்களையும் பயங்கரவாதிகள் விடுவித்து விட்டதாக பாடசாலை தலைமை ஆசிரியர் தெரிவித்துள்ளார்.

மாணவர்கள் அனைவரும் பலவீனமாகவும், ஆரோக்கியமற்ற நிலையிலும் இருந்ததால் அவர்கள் அனைவரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளதாக அவர் தெரிவித்தார்.

அமெரிக்கா

### சுமார் 3 கிலோ நிறை கொண்ட பர்கரை

## 4 நிமிடங்களில் காலி செய்த நபர்

அமெரிக்காவில் லாஸ் வேகாஸ் நகரத்தில் உள்ள உணவகமான ஹார்ட் அட்டாக் கிரில்லில் (Heart Attack Grill), ஒக்டபிள் பைபாஸ் சலஞ்ச் (Octuple Bypass challenge)எனும் உணவு உண்ணும்போட்டி நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் போட்டிக்காக வைக்கப்பட்டிருந்த பர்கர் சுமார் 20,000 கலோரி கொண்டதும் 2.94 கிலோ நிறையுடையதும் ஆகும்.

இப் பிரமாண்ட பர்கரானது பன்றி இறைச்சி 40 துண்டுகள், சீஸ் 16 துண்டுகள், வெங்காயம் ஒன்று, தக்காளி இரண்டு, மிளகாய் மற்றும் ரொட்டி உள்ளிட்ட பலவற்றை பயன்படுத்தித் தயாரிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச் சவாலில் பங்கேற்ற அமெரிக்காவை சேர்ந்த பிரபல சாப்பாட்டு போட்டியாளரான மாட் ஸ்டோனி (Matt Stonie) என்ற 29 வயது இளைஞர் வெறும் வெறும் 4:10 நிமிடங்களில் இப்பர்கரை உண்டு அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளார்.

இதற்கு முன்னர் மிகி சுடோ என்ற நபர் 7:42 நிமிடங்களில் இவ்வாறானதொரு பர்கரை சாப்பிட்டு பெற்ற உலக சாதனை மாட் ஸ்டோனியால் முறியடிக்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# வெள்ளி வென்றார் பவினா



டோக்கியோ, மாற்றுத்திறனாளிகளுக்கான 16ஆவது பாரா ஒலிம்பிக் போட்டி ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடந்து வருகிறது. இதில் இந்தியா சார்பில் 54 வீரர், வீராங்கனைகள் 9 விளையாட்டுகளில் பங்கேற்றுள்ளனர்.

இந்த போட்டியில் 5 ஆவது நாளான 28ஆம் தினதி நடந்த டேபிள் டென்னிஸ் போட்டியின் பெண்கள் ஒற்றையர் 'சி4' பிரிவு (காலில் பாதிப்பு அடைந்தவர்கள்) அரைஇறுதி ஆட்டம் ஒன்றில் இந்திய வீராங்கனை பவினாபென் பட்டேல், உலக தரவரிசையில் 3 ஆவது இடத்தில் உள்ள சீனாவின் ஜாங் மியாவுடன் மோதினார்.

34 நிமிடம் பரபரப்பாக அரங்கேறிய இந்த ஆட்டத்தில் வீல்சேரில் அமர்ந்தபடி கலக்கலாக ஆடிய பவினாபென் பட்டேல் 7-11, 11-7, 11-4, 9-11, 11-8 என்ற செட் கணக்கில் ஜாங் மியாவுக்கு அதிர்ச்சி அளித்து இறுதிப்போட்டிக்குள் அடியெடுத்து வைத்தார்.

11 முறை தொடர்ச்சியாக ஜாங் மியாவிடம் தோல்வி கண்டு இருந்த பவினாபென் பட்டேல் அவருக்கு எதிராக முதல்முறையாக வெற்றியை ருசித்தார்.

இதன் மூலம் குஜராத்தை சேர்ந்த 34 வயதான பவினாபென் பட்டேல் பாராஒலிம்பிக் டேபிள் டென்னிஸ் போட்டியில் இறுதி ஆட்டத்துக்கு முன்னேறிய முதல் இந்தியர் என்ற வரலாறு படைத்தார்.

இந்நிலையில், இன்று நடைபெற்ற இறுதிப்போட்டியில் பவினாபென் பட்டேல், உலகின் 'நம்பர் ஒன்' வீராங்கனையான சீனாவின் ஜோவ் யிங்கை சந்தித்தார்.

பரபரப்பாக அரங்கேறிய ஆட்டத்தில் சீன வீராங்கனை ஜோவ் யிங்கிடம் 3-0 என்ற செட் கணக்கில் பவினாபென் பட்டேல் போராடி தோல்வியடைந்தார். இதன் மூலம் பவினாபென் படேல் வெள்ளிப் பதக்கம் வென்று வரலாறு படைத்துள்ளார்.

## என்னை பயன்படுத்தாதீர்கள்




உங்கள் பிரச்சாரத்துக்கு என்னைப் பயன்படுத்தாதீர்கள் என்று ஜப்பானில் நடந்துமுடித்த ஒலிம்பிக் போட்டியில் ஈட்டி எறிதலில் தங்கம் வென்ற நீரஜ் சோப்ரா காட்டமாக தெரிவித்துள்ளார்.

போட்டியின் முதல் சுற்றில் நீரஜ் சோப்ரா ஈட்டி ஏறியும்போது அவரது ஈட்டியை காணாமல் தேடியதாகவும், பின்னர் பாகிஸ்தான் வீரர் அர்ஷத் நதீம் அதனை வைத்திருந்ததால் அவரிடம் பெற்று தனது போட்டியை தொடர்ந்ததாக சமீபத்திய நேர்காணல் ஒன்றில் நீரஜ் தெரிவித்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து போட்டியின்போது மற்றவர்களது ஈட்டியை எப்படி வைத்திருக்க முடியும் என்று பாகிஸ்தான் வீரர் அர்ஷத் நதீமுக்கு எதிராக சமூக வலைதளங்களில் பலரும் பதிவிட்டனர். இந்த நிலையில் பாகிஸ்தான் வீருக்கு தனது ஆதரவை நீரஜ் சோப்ரா வழங்கியுள்ளார்.

இதுகுறித்து நீரஜ் சோப்ரா தனது ட்விட்டர் பக்கத்தில், " உங்களது பிரசாரத்துக்காக என்னையும், எனது கருத்துகளை பயன்படுத்தாதீர்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். விளையாட்டு எங்களுக்கு ஒற்றுமையை கற்று கொடுத்திருக்கிறது.

என்னுடைய சமீபத்திய கருத்துக்கு சிலரிடமிருந்து வரும் கருத்துகள் என்னை ஏமாற்றம் அடைய செய்துள்ளது. நீங்கள் ஒரு கருத்தை தெரிவிக்கும்போது அந்த விளையாட்டின் நெறிமுறையை தெரிந்து வைத்திருப்பது அவசியம்" என்று தெரிவித்துள்ளார்.

## இந்திய படுதோல்வி




லீட்ஸ்,இந்தியா - இங்கிலாந்து கிரிக்கெட் அணிகள் இடையிலான 3 ஆவது டெஸ்ட் போட்டி லீட்சில் உள்ள ஹெட்டிங்லே ஸ்டேடியத்தில் நடைபெறுகிறது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா 78 ஓட்டங்களில் சுருண்டது. பின்னர் தனது இன்னிங்சை தொடங்கிய இங்கிலாந்து அணி கேப்டன் ஜோ ரூட்டின் அபார சதத்தால் (121 ஓட்டங்கள்) 432 ஓட்டங்களை குவித்தது.

அடுத்து 354 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் இந்திய அணி தனது 2-வது இன்னிங்சை விளையாடியது. நேற்றுமுன்தின ஆட்ட நேர முடிவில் இந்திய அணி 80 ஓவர்களில் 2 விக்கெட்டுக்கு 215 ஓட்டங்களை எடுத்து இருந்தது. புஜாரா 91 ஓட்டங்கள் ( 180 பந்து, 15 பவுண்டரி), கேப்டன் கோலி 45 ஓட்டங்கள் (94 பந்து, 6 பவுண்டரி) களத்தில் இருந்தனர்.

இந்த நிலையில், நேற்று(28) 4 ஆம் நாள் ஆட்டம் ஆரம்பமானது சதம் அடிப்பார் என எதிர்பார்க்கப்பட்ட புஜாரா மேற்கொண்டு ஓட்டங்கள் எதுவும் அடிக்காமல் ஆட்டமிழந்து ஏமாற்றம் அளித்தார். அரை சதம் அடித்த நிலையில், விராட் கோலி (55 ஓட்டங்கள்) பெவிலியன் திரும்பினார்.

ரகானேவும் 10 ஓட்டங்களுடன் வந்த வேகத்திலேயே நடையைக் கட்டினார். ஒரேயொரு ஓட்டம் மட்டுமே எடுத்த நிலையில், ரிஷப் பண்ட், ராபின்சன் ஆட்டமிழந்தார். பின் வரிசை வீரர்களும் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். இதனால், இந்திய அணி 99.3 ஓவர்களில் 10 விக்கெட்டுகளையும் பறிகொடுத்து 278 ஓட்டங்களை மட்டுமே சேர்த்தது. இதனால், இந்திய அணி ஒரு இன்னிங்ஸ் மற்றும் 76 ஓட்டங்களி வித்தியாசத்தில் படு தோல்வியை சந்தித்தது.








## இருவருக்கு அனுமதி

இலங்கை கிரிக்கெட் அணி வீரர்களான வனிந்து ஹஷரங்க மற்றும் துஷ்மந்த ஷமிர ஆகியோருக்கு இந்தியன் பீரிமியர் லீக் Indian Premier League (IPL) போட்டிகளில் விளையாட ஸ்ரீ லங்கா கிரிக்கெட் அனுமதி வழங்கியுள்ளது.

## கட்டுக்கடங்காக காளையாக அழைப்பு



தனது 18ஆவது வயதில் தேசிய சீனியர் அணியில் தடம் பதித்த ரொனால்டோவை, 2003 ஆம் ஆண்டு முதல் முறையாக சீனியர் கிளப் அணிகளில் மிகவும் பிரபலமான இங்கிலாந்தின் மேன்செஸ்டர் யுனைடெட் ஒப்பந்தம் செய்து கொண்டது.

பெருந்தொகைக்கு ஒப்பந்தமானவர் என்ற பெருமையையும் பெற்றிருந்தார் ரொனால்டோ.

கிட்டத்தட்ட 12 ஆண்டுகளுக்கு பிறகு பிரிமியர் லீக் போட்டிகளில் தனிச்சிறப்பு கொண்ட தனது தாய் கிளப்பான மேன்செஸ்டர் யுனைடெட்டில் இணைகிறார் ரொனால்டோ.

மேன்செஸ்டர் சிட்டி அணி ஒப்பந்தத்துக்கான பேச்சுவார்த்தையின் கடைசி நிமிடத்தில் பின் வாங்கிவிட்ட நிலையில், இளங்கன்றாக கிளப்பில் இருந்து சென்ற ரொனால்டோவை கட்டுக்கடங்காக காளையாக மீண்டும் அணிக்கு அழைத்துள்ளது மேன்செஸ்டர் யுனைடெட்.

## லீட்ஸில் வீக்

இங்கிலாந்தைச் சேர்ந்த ஜார்வோ என்ற ரசிகர் இந்தியா- இங்கிலாந்து இடையிலான இரண்டாவது டெஸ்ட்டின் போது இந்தியாவின் சீருடையை அணிந்து கொண்டு சக ஃபீல்டர் போல மைதானத்திற்குள் நுழைந்தார். பின்னர் மைதானத்தில் இருந்த காவலர்கள் மூலம் அவர் எச்சரிக்கப்பட்டு வெளியேற்றப்பட்டார்.

இந்நிலையில் லீட்ஸில் நடைபெற்று வரும் 3 ஆவது டெஸ்ட்டின் போதும் ஜார்வோ இந்திய பேட்ஸ்மேன் போல ஆடுகளம் வரை சென்றுவிட்டார். காவலர்கள் அவரை அப்புறப்படுத்த முயன்ற போது ஜார்வோ அடம் பிடித்தபடியே வெளியேற மறுத்தார். நகைச்சுவையான தருணமாக பார்க்கப்பட்டாலும் பாதுகாப்புகளை மீறி ரசிகர் ஒருவர் மீண்டும் மீண்டும் மைதானத்திற்குள் நுழைவது விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது. பாதுகாப்பு வீக்காகி உள்ளதை காண்பித்துள்ளது என்றும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.



LK Newspapers Community

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 30 ஓகஸ்ட் 2021, இல. 8, ஹுனுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.